விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 19 | ஷவ்வால் 26 | இதழ் 14
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 01-06-1989

University of Jaffna RECEIVED 1989-6--8 Periodicals Division Library

## இலங்கை அரசு - விடுதலைப்புலிகள்
## 3 வார காலத்தில் 2-ம் சுற்றுப் பேச்சு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் இடம்பெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் சார்பில் கூடுதலான பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வார காலத்தில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகக் கொழும்பு வந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு திரும்பியுள்ளனர்.

விமானப் படை ஹெலிகப்டர் இவர்களைக் கொழும்பில் இருந்து முல்லைத்திவுக்கு அழைத்துச் சென்றதாக அரசின் உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

திரு. அன்ரன் பாலசிங்கமும், அவரது பாரியாரும் தவிர்ந்த ஏனைய 9 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளே இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டனர். அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் நடுப்பகுதியில் அல்லது இறுதியில் நடைபெறக்கூடும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இது ஒரு சிறப்புச் செய்தி —
# குற்றவியல் சட்டத்தில்
# பாரிய மாற்றங்கள்!

(கொழும்பு)

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் கீழ் சில குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அழைப்புக் கட்டளைகள் விடுக்கப்பட்டு விசாரணைக்கு நியமிக்கப்பட்ட நாளன்று வழக்குத் தொடுப்புத் தரப்பினர் ஆயத்தமாக இல்லாவிடின், நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிப்பது தொடர்பாக குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் திருத்தம்கொண்டு வரப்படவுள்ளது.

தற்போதைய குற்றவியல் நடவடிக்கை முறை சட்ட விதிகளின் பிரகாரம் ஏதேனும் ஒரு இடப்பரப்புக்கு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணையாளரினால் அல்லது சமாதான அலுவலரினால் அல்லது பகிரங்க சேவையாளர் ஒருவரினால் அல்லது மாந

(8-ம் பக்கம் பார்க்க)

## நினைவுக்கு வரும் யாழ். பொது நூலகம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண நகரின் கல்விக் களஞ்சியமாகப் பிரகாசித்த யாழ்ப்பாணப் பொதுநூலகம் தீக்கிரையான தினம் இன்று ஜூன் 1-ம் திகதியாகும்.

1981 ம் ஆண்டு ஜூன் 1-ம் திகதி இந்த நூலகம் தீயிடப்பட்டுச் சாம்பரான செய்தி கேட்ட தமிழறிஞர் தாவீது அடிகள் அதிர்ச்சியால் மரணித்த செய்தியும் அன்றுதான் நிகழ்ந்தது.

இந்த நூலக எரிப்பு நடவடிக்கைச் செய்தி உலகில்

(8ம் பக்கம் பார்க்க)

## பௌத்த சாசன அமைச்சு: கச்சேரிகளில் ஏற்பாடு

[நமது நிருபர்]

நாடுமுழுவதுமுள்ள சகல கச்சேரிகளிலும், பௌத்த சாசன அமைச்சு தனது பிரிவு ஒன்றை அமைக்கும்.

இது தொடர்பாக பௌத்த சாசன அமைச்சரும் ஜனாதி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜி.ஸி.ஈ.(உயர்தரம்) பரீட்சை அமைப்பு முறைகளில் மாற்றம்

(கொழும்பு)

க. பொ. த. [உயர்தரம்] பரீட்சை வினாத்தாள்கள் பலவற்றின் அமைப்பு முறைகளில் மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன,

எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் முதல் இந்த மாற்றங்களைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

பரீட்சார்த்திகள் தமக்கு விருப்பமான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு இந்தத் திட்டத்தின்பின் அவர்களுக்கு அதிக சந்தர்ப்பம் வழங்கப்படும்.

பௌதிகவியல், இரசாயனவியல். விலங்கியல், தாவர

(8-ம் பக்கம் பார்க்க)

## 'ஹெலி'விபத்து: ஐவர் பலி

[சென்னை]

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ரயில் நிலையத்திற்கு அருகில் நடந்த ஹெலி கோப்டர் விபத்தில் ஐந்துபேர் உயிரிழந்தனர்.

இந்த ஹெலிகோப்டர் யந்திரக் கோளாறு காரணமாக கீழே இறக்கப்பட்டபோது தீப்பிடித்ததாகக் கூறப்படுகிறது.

## செம்பியன்பற்று - மாமுனையில் கடும் மோதல்
### ஷெல் சத்தங்கள் துப்பாக்கி வேட்டுகள்

(மருதங்கேணி)

செம்பியன்பற்று- மாமுனை என்னுமிடத்தில் இரு சாராருக்கிடையே கடும்மோதல்கள் இடம்பெற்று வருகின்றன,

இம்மோதலில் பலர் உயிர் இழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. எனினும் இப் பகுதிக்குள் எவரும் செல்ல முடியாததால் அங்கு இடம்பெறும் சம்பவங்கள் குறித்து ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இம்மோதலையடுத்து பருத்தித்துறை- மருதங்கேணி வீதியிலான போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

அப்பகுதியில் ஷெல் சத்தங்களும் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன,

## ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவு

(கொழும்பு)

க. பொ. த, (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதாமுல்ல தெரிவித்திருக்கிறார்.

## தென்பகுதியில் வன்முறை: ஒன்பது பேர் சுட்டுக் கொலை!

(கொழும்பு)

தென்பகுதியில் கடந்த இரு தினங்களில் இடம்பெற்ற பல சம்பவங்களில் 9 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் மாகாணசபை உறுப்பினர் ஒருவரது வீடும் பலத்த சேதத்துக்குள்ளானது. இவரது வீட்டிலிருந்து சில ஆயுதங்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

நிக்கவரெட்டியாவில் ஐ. சோ. முன்னணி, மாகாண சபை உறுப்பினரான திரு. கே. எஸ். திலகரட்ணவின் வீட்டை தாக்கிச் சேதப்படுத்திய கோஷ்டிஒன்று காவலாளிகள் இருவரை சுட்டுக்கொன்றது. அங்கிருந்து ஆயுதங்களை கொள்ளையடித்ததுடன் வீடும் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. ஜீப்பும் தீயிட்டுகொளுத்தப்பட்டது.

ஹோமகம பகுதியில் ஐ. தே. கட்சி தீவிர ஆதரவாளர் சுட்டுக்கொல்லப்பட்டார். இங்கிரிய பகுதியில் ஒரேகுடும்பத்தை சேர்ந்த இருவரும் குருணகல பகுதியில் மூவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்கள் ஆயுதம் தாங்கிய குழுக்களினாலேயே மேற்கொள்ளப்பட்டது. பாணந்துறையில் முன்னாள் ஐ. தே. க. நகரசபை உறுப்பினர் திருமதி டி. தர்மசேன சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த இருவாரத்தில் நாற்பது பேர் வரை கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலைக்கழக மாணவர் விவகாரம்: உயர்மட்டக் குழு நாளை விசாரணை

(நமது நிருபர்)

பல்கலைக்கழக மாணவர்களைக் கைதுசெய்தல், காவலில் வைத்திருத்தல், விடுதலைசெய்தல் என்பன தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீதினால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழு தனது முதலாவது விசாரணைக்கூட்டத்தை நாளை நடத்தும்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரான திரு. ஓ. எஸ். எம். செனிவிரத்ன தலைமையில் உப தலைவராக எட்வர்ட் குணவர்த்தனவும், அங்கத்தவர்களாக சகல பல்கலைக்கழக உபவேந்தர்களும், உயர் கல்வி அமைச்சின் செயலாளராக திரு. ஏ. என். ஜயவர்த்தன பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிகார ஆகியோரும் மற்றும் பலரும் அடங்குகின்றனர்.

இக்குழு பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்படுதல், தடுப்புக்காவலில்

(8-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா வழமைக்கு திரும்பியது

(வவுனியா)

வவுனியா வழமைக்குத் திரும்பியது. பாடசாலைகள் தவிர ஏனைய சேவைகளும் வழமைபோல இயங்குகின்றன.

அரச அலுவலகங்களும், வங்கிகளும், வர்த்தக நிறுவனங்களும் நேற்று திறந்திருந்தன.

போக்குவரத்துச் சேவைகளும் எதுவித இடையூறும் இன்றி நடைபெற்றது.

ஹர்த்தால் காரணமாக [illegible] தது தெரிந்ததே.

## கலைஞர்களுக்கு அரசு கௌரவம்

(கொழும்பு)

கலைத்துறையில் நாட்டுக்குப் பெரும் சேவையாற்றியவர்கள் என்ற வகையில் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக நீதி அமைச்சு ஒரு தமிழர், ஒரு முஸ்லிம் உட்பட ஏழு பேருக்கு சமாதான நீதிவான் பதவியினை வழங்கியுள்ளது.

திருமதி அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன், ஜனாப் மொஹிதீன் பேக், திரு. வெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், திருமதி சுமித்ரா பீரிஸ், திரு. சித்திரசேன, திரு. சனத் நந்தசிறி, திரு. சரத் விமல வீர ஆகியோரே இவ்வாறு சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி 2726)

மலிவு விலையில் பலவகையான பாம்ஸ், குரோட்டன்ஸ், சாடியுடன் 1-6-89 இல் இருந்து 15 - 06 - 89 வரை விற்கப்படும். சிதம்பரத்தை, அஸ்பரகாஸ், எக்ஸ்சோரு, பிறைட் ஒவ் யப்பான், குரோட்டன்ஸ், பாம்ஸ் பொலித்தீன் பைகளில் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ், நேசரி, 152/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம். C-2769

### தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம், வெண்கலம் உயர் விலைக்கு எடுக்கப்படும். பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2752)

### வகுப்புகள்

O/L பரீட்சை எடுத்தவர்களுக்கும் ஏனைய வகுப்புகளுக்கும் விசேட ஆங்கில வகுப்புகள் 3-5-1989 இல் ஆரம்பமாகின்றன. ஆசிரியர் K. மூர்த்தி. தொடர்பு: நாகேந்திரம், 34/4, செட்டித் தெரு நல்லூர். (சி 2774)

### கல்வி

5ம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை 3-6-89 சனி பி. ப 3 மணிக்கு தமிழ்/கணிதம் நடைபெறும் விண்ணப்பங்களை பதிவு செய்யவும் ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. விபரங்கட்கு புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி யாழ்ப்பாணம். சி-2759

---

# PROFESSIONAL EXAMS NOV., DEC. '89

## C.I.M.A, I.D.P.M, I.A.B, A.A.T.

ஆரம்பம்: 03-06-89 முதல்

விரிவுரைகள்:- ஜெயரட்ணம், கைலாயபிள்ளை, கதிர்காமநாதன், நவரேந்திரன், புஷ்பா, சிவபாதசுந்தரம் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்.

JOIN THE LEADERS

## School of Business Administration,

16, 3-RD CROSS ST., JAFFNA.
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
(C-2780)

---

# காணி விற்பனை

1. நல்ல சூழலும், ஏற்ற வசதிகளும் கொண்ட 1 1/2 பரப்புக் காணியும் வீடும் நீர்வேலிப்பகுதியில் விற்பனைக்கு உண்டு.
2. மல்லாகம் சந்திக்கு அருகாமையில் 3 பரப்பு 17.5 குளி விஸ்தீரணமுள்ள வீடு கட்ட அல்லது வியாபாரத்திற்கு உகந்த காணி விற்பனைக்குண்டு.
3. கைதடியில் 2 பரப்பு விஸ்தீரணமுள்ள 4 துண்டுகள் விற்பனைக்குண்டு.
4. நுணாவிலில் 2 பரப்பு விஸ்தீரணமுள்ள 9 துண்டுகள் விற்பனைக்குண்டு.

உங்கள் காணிகளை, வீடுகளை யாழ்ப்பாணத்தில் விற்க விரும்புகிறீர்களா?

கொழும்பில் காணிகள் வீடுகள் வாங்க, விற்க விரும்புகிறீர்களா? நாடுங்கள்:

50 வருட சேவையில் அடி எடுத்து வைக்கும்

## த பினான்ஸ் கொம்பனி லிமிட்;

29, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை பூராவும் 28 கிளைகளைக்கொண்டது.
(ஏ 249)

---

# தொழிற் பயிற்சிகள்

COURSES

* COMPUTER PROGRAMMING (BASIC)
60 மணித்தியால செய் முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
* ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங், ரெலிவிஷன், வீடியோ டெக் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
* எலெக்ரிக்கல் வயறிங், வீட்டு மின் வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
* றீவைண்டிங் - மின்மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் வைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
* எயர் கொண்டிசனிங் (AIR CONDITIONING)
* வெல்டிங் (WELDING)

பயிற்சிகள் குறைந்த காலத்தில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

குறிப்பு:- வேலைசெய்வோரின் வசதியை முன்னிட்டு சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புகளும் நடைபெறும்.

ஆரம்பம்: 02-06-1989 (கிழமை நாட்கள்.)
03-06-1989 (சனி, ஞாயிறு.)

## Jaffna Technical Institute

ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவை அருகாமை), யாழ்ப்பாணம்.
(ஏ 226)

---

# கைதிகளின் மனநிலைமாற்ற ஒலி, ஒளி ஏற்பாடு!

(துவான்நஸீர்)

சிறைக் கைதிகளை புனர்வாழ்வளிக்கும் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு பொருத்தமான ஒளி, ஒலிப் பதிவுக் கருவிகளையும் நாடாக்களையும் பெற்றுக்கொடுக்கும்படி நீதி, பாராளுமன்ற விவகார அமைச்சர் திரு. எம். வின்சன்ட் பெரேரா சகல சிறைச்சாலைப் பொறுப்பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலுமுள்ள சகல சிறைச்சாலைகளிலும் மதவழிபாடுகளுக்கென நாள் ஒதுக்கப்பட்டுள்ளது போல இதற்கென தனியான நாட்கள் ஒதுக்கப்படவுள்ளன.

கல்வி வசதியளித்தல், மனநிலையை மாற்றல் என்பன தொடர்பாக அன்பு, கருணையை கைதிகள் மனதில் ஏற்படுத்தக் கூடிய வகையிலான வீடியோப் படங்களையும், கல்வி, கலாசார மத விடயங்களை உள்ளடக்கிய ஒலிப்பதிவு கசட்டுகளையும் இவர்களுக்கு வழங்கி அவற்றை பார்த்தும் செவிமடுத்தும் கைதிகள் மனம் திருந்தும் வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இத்திட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக நிதிஅமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'க்குத்தெரிவித்தார்.

---

# எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) சிவச்சந்திரன் - பல்லவி
"விழியோரக் கவிதை"
(Pyramid Original)

(2) கார்த்திக் - ஷோபனா
"காதல் கீதம்"

(3) முத்துராமன் - தேவிகா
"நெஞ்சில் ஓர் ஆலயம்"
(Raj Original)

(4) Hell Of The Battle Ground
(War Film)

இன்றைய வெளியீடு:

ரஜனிகாந் - ஷோபனா
"சிவா"
(Pyramid Original)

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி 250)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. சின்னத்தம்பி இரங்கநாதன்

தோற்றம்: சின்னத்தம்பி தையல்நாயகி மடியில் 14-09-1904
ஏற்றம்: சர்வேஸ்வரன் உலகநாயகி அடியில் 01-06-1987

பக்தியே மனிதனுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சியும் தைரியமும் தரும்
ஆண்டவன் திருவடிகளில் சரண் புகுவதற்கு அதுவே வழி
குறை ஒன்றுமில்லாத இரங்கநாதா! உன்தன்னோடு உறவேல்
நமக்கு இங்கு ஒழியாது எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன்தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே ஆட் செய்வோம்.

"பற்றுடனே செய்யும் உதவி 'சுயநலம்' உற்றது
பற்றற்று செய்யும் உதவி 'சுயநலம்' அற்றது"
— ஸ்ரீ சத்தியசாயி பாபா.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரிகள், பேரப்பிள்ளைகள், பூட்டன்.

ஆஸ்பத்திரி வீதி, தெல்லிப்பழை. (சி-2754)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனுவில் பேச்சுக்கள் ஆரம்பம்; மாணவர் கோரிக்கை நிராகரிப்பு

## மேலும் தொடர்வதாகத் தகவல்!

(பீக்கிங்)

**சீனுவில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் அரசுக்கும்-மாணவர்களுக்குமிடையில் ஆரம்பமாகியுள்ள பேச்சுகளில் மாணவர்களின் நான்கு முக்கிய கோரிக்கைகளை அரசு நிராகரித்துள்ளது. எனினும் பேச்சுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.**

சீனுவில் சில முக்கியகோரிக்கைகளை முன்வைத்து கடந்த இரு வாரங்களுக்கு முன் அரசுக்கு எதிராக பெரும் போராட்டம் மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் ஆதரவைப் பெற்ற இப்போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாதுபோன அரசு இராணுவச்சட்டத்தை அமுல் படுத்தியது. அதுவும் பலனளிக்கவில்லை. போராட்டத்தை முடிவிற்குக் கொண்டுவரபேச்சுகளுக்கு வருமாறு மாணவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இந்நிலையில் மாணவர் போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இரு தரப்பு பேச்சுக்களும் ஆரம்பமாயின. இப்பேச்சுகளினுல் சீனுவில் மீண்டும் அமைதி ஏற்படவும் மாணவர் போராட்டம் கைவிடப்பட வேண்டிய தன் அவசியத்தையும் மாணவர் பிரதிநிதிகள் அங்கு வலியுறுத்தி தம் தரப்பிலான நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மாணவர்கள் முன்வைத்த நான்கு கோரிக்கைகளும் அங்கு நிராகரிக்கப்பட்டுள்ளது. இராணுவச்சட்டம் நீக்கப்பட வேண்டும், பீஜிங்கிலிருந்து படைகளை வாபஸ்பெற வேண்டும், தீவிரமான மாணவர்களை இனிவரும் காலங்களில் பழிவாங்கக் கூடாது, பத்திரிகைசுதந்திரம் வேண்டும் என்பதே மாணவர் முன்வைத்த முக்கிய கோரிக்கைகளாகும்.

இக்கோரிக்கைகளை நிராகரித்த சீன அரசு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர் தலைவர்களையும், புத்திஜீவிகளையும் தண்டிக்கமாட்டாதென்றும்] அங்கு தெரிவித்துள்ளது. தற்போது பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது,

சீனுவில் மீண்டும் அமைதி ஏற்படுவது மாணவர்களின் மேற்படி நான்கு முக்கிய கோரிக்கைகளுக்கும் அரசு அளிக்கும் முக்கியத்துவத்தை பொறுத்தே என எதிர்பார்க்கப்படும் வேளையில் அரசு இக்கோரிக்கைகளை நிராகரித்தது சீனுவில் மீண்டும் நெருக்கடிகளை தோற்றுவிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நூல் வெளியீட்டு விழா

(மட்டுவில்)

மட்டுவில் ஆ. நடராசா எழுதிய ''சந்திர மௌலீசர் ஆலய வரலாறும் திருப்பதிகமும்'' என்னும் நூல் வெளியீட்டு விழா திரு. ச. சின்னத்தம்பி தலைமையில் மட்டுவில் வடக்குசந்திரமௌலீசர்வித்தியாலயத்தில் எதிர்வரும் 3ம் திகதி நடைபெறுகிறது.

சிவஸ்ரீ அ. சிவசாமிக்குருக்கள் ஆசியுரை வழங்க புலவர் பார்வதி நாதசிவம் வெளியீட்டுரை நிகழ்த்துவார்,

## அமைச்சர் மறைவுக்கு இரங்கல்

(புதுடில்லி)

இந்திய மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு. வீர்பகதூர்சிங்கின்மரணத்திற்கு பல தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

திரு. வீர் பகதூர்சிங் பாரிஸில் மாநாடொன்றில்கலந்து கொள்ள சென்றிருந்தபோதே அங்கு மாரடைப்பால் காலமானுர். இவர் உத்தரபிரதேச முன்னுள் முதலமைச்சர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இராணுவசெலவை குறைக்க சோவியத்யூனியன் முடிவு

(மாஸ்கோ)

சோவியத்யூனியன் தனது இராணுவசெலவுகளை அடுத்த வருடம் பதினுன்கு சதவீதம் குறைக்கவுள்ளது. இத் தகவலை அதிபர் திரு. மிகையில் கொர்பச்சேவ் கிரெம்ளின் மகாசபையில் அறிவித்துள்ளார்.

சோவியத்தின் தற்போதைய இராணுவச்செலவு ஒரு லட்சத்து ஐயாயிரத்துஅறுநூறு கோடி டாலர் ஆகும். இதில் அடுத்த வருடம் 14 சதவீதம் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் குறைக்கப்படும் பணம் சமூக, பொருளாதார பணிக்கு செலவிடப்படும் என்றும் திரு, கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

இராணுவ செலவுகள் 1987-ம் ஆண்டிலும் குறைக்கப்பட்டதன் மூலம் 1,600 கோடி டாலர் சேமிக்கப்பட்டதாகவும் சோவியத்தின் இராணுவச்செலவுகள் அமெரிக்காவின் பாதுகாப்பு செலவை விட குறைவானது என்று கூறிய அவர் சோவியத்தின் உதவிபெறும் பல நாடுகளில் இந்தியா முதலிடத்தை வகிப்பதாகவும் கூறினுர்.

## அரபுக் கிராமத்தில் யூத மாணவர் தாக்குதல்

### பலர் பலி

(ஜெருசலம்)

அரபுக் கிராமமொன்றினுள் அத்துமீறிப் பிரவேசித்த 30 யூத மாணவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அரபுக்கள் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளதாகத் தெரியவருகிறது.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலிருக்கும் அரபுக் கிராமம் ஒன்றிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. யூத வேதாகம கல்லூரி மாணவர்களே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக இஸ்ரேல் வானெலி கூறியுள்ளது.

கிராமத்தினுள் ஆயுதங்களுடன் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்த யூத மாணவர்கள்மீது ஆத்திரமடைந்த அரபுமக்கள் கற்களை வீசித் தாக்கினர் பலத்த தாக்குதலுக்கிலக்கான யூத மாணவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனுல் பல அரபுக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துமுள்ளனர். தாக்குதலை மேற்கொண்ட மாணவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இச்சம்பவத்தால் அரபுப் பகுதிகளில் பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ஆப்கான் நெருக்கடி 4மாதத்திற்குள் தீர்ந்துவிடும்

### வெளிநாட்டு அமைச்சர் நம்பிக்கை

(காபூல்)

ஆப்கான் அரசியல்நெருக்கடி இன்னமும் நான்கு மாதங்களுக்குள் தீர்க்கப்பட்டுவிடும் இவ்வாறு ஆப்கானிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஜனுப் அப்துல் வக்கீர்ல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சித் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது என்றும் ஜனுப் வக்கில் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் ஆப்கானிஸ்தானின் கிழக்கு நகரான ஜலாலாபாத்தில் அரசு துருப்புகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடம் பெற்ற மோதலில் 139பேரும் வேறு இடங்களில் இடம் பெற்ற மோதலில் 30 பேரும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகையிலை தவிர்ப்பு நாள்

(ஜெனிவா)

உலக சுகாதார ஸ்தாபனம் நேற்று புகையிலை தவிர்ப்பு நாளை கொண்டாடியது. பெண்கள் புகை பிடிப்பதனுல் உண்டாகும் தீமையை எடுத்து விளக்கும் வண்ணம் உலக நாடுகள் எங்கும் பல நிகழ்சிகள் தயாரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டது.

புகைபிடிக்கும் பழக்கத்தையும் புகையிலை மெல்லுவதையும் நிறுத்துமாறு நேற்று உலக மக்கள் இந்த ஸ்தாபனத்தால் கேட்கப்பட்டனர். இதன் மூலம் வீண்செலவை ஏற்படுத்தும் தீய பழக்கத்தை தவிர்த்துவிடலாம் என்றும் ஸ்தாபனம் கூறியது.

இந்தியாவில் புகைபிடிப்பதால் மட்டும் ஆண்டுதோறும் ஆறுலட்சத்து முப்பதாயிரம் பேர் இறக்கிறுர்கள். தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் புகையிலை மெல்லும் பழக்கத்தால் வாயில் புற்றுநோய் ஏற்பட்டு பலலட்சம் மக்கள் இறந்து போகிறுர்கள்.

## 2-ம் உலகப் போரில் பலியான இராணுவ வீரர்களின் சமாதிக்கு அதிபர் புஷ் அஞ்சலி

(ரோம்)

இரண்டாம் உலக யுத்தத்தில் இத்தாலியில் பலியான அமெரிக்க இராணுவ வீரர்களின் சமாதிக்கு அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் அஞ்சலி செலுத்தினுர்.

இரண்டாம் உலக யுத்தத்தில்இப்பகுதியில் இடம்பெற்ற போரில் எண்ணுயிரம் அமெரிக்க இராணுவத்தினர் பலியாகினர். இவர்களின் சேவையைப் பாராட்டியே திரு. புஷ் ரோமின் கடலோரப்பகுதி கிராமம் ஒன்றில் கட்டப்பட்டுள்ள இந்த வீரர்களின் சமாதிக்கு சென்று தமது அஞ்சலியை செலுத்தினுர்.

இதன்போது உரையாற்றுகையில் இந்த இராணுவ வீரர்கள் நாட்டுக்காக தமது உயிரைஇழந்து எமக்கு சுதந்திரத்தை பெற்றுத் தந்தனர். இவ்வாறு இந்த யுத்தத்தில் பலியான லட்சக் கணக்கான போர் வீரர்களின் மரணம் யுத்தங்கள் தவிர்க்கப்பட வேண்டியதின் அவசியத்தை உலகிற்கு வலியுறுத்துகிறது என்றுர்.

## பிரான்ஸிலுள்ள தமிழருக்கு அபிவிருத்தித்திட்டங்கள் தயாராகின்றன

### அங்கிருந்து தமிழரை அனுப்ப வேண்டாமெனவும் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய நாடுகளில்வசிக்கும் இலங்கையர்களை விரைவில் திருப்பி அனுப்ப முயற்சிகள் பேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், பிரான்ஸில் தஞ்சம் புகுந்திருக்கும் அறுபதாயிரம் இலங்கையர்களையும் திருப்பி அனுப்பக் கூடாது.

பிரான்ஸிலுள்ள அறுபதாயிரம் இலங்கையரில் தொண்ணூற்றைந்து வீதமானேர் சட்டவிரோதமான முறையிலேயே பிரான்ஸில் வாழ்கிறுர்கள். இது பிரான்ஸ் அரசுக்குத் தெரியும். எனினும், அங்குள்ள இலங்கையர்களை உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பினுல் அவர்கள் தற்போது இலங்கையிலுள்ள பொருளாதார சூழ்நிலை காரணமாக வாழமுடியாதவர்களாகப் போய்விடுவார்கள் என்பதால் அவர்கள் நிலை குறித்து பிரான்ஸ் அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது.

அண்மையில் இலங்கை முழுவதும் [illegible] கொண்டு நிலைமையை அவதானித்த ஜெராட் ஞெபேட்சன், பிரான்ஸ் அரசுக்கும் அங்குள்ள பொதுநல நிறுவனங்களுக்கும் பிரான்ஸில் வாழும் இலங்கையர்களை உடனடியாக அவர்களின் நாட்டுக்கு அனுப்பக்கூடாதெனத் தெரிவித்துள்ளாராம்.

பிரான்ஸில் வாழும் இலங்கையரில் 95 வீதமானேர் சட்ட விரோதமானவர்ளாக வாழ்கின்றபோதிலும் அவர்களில் (கிரிமினல்) குற்றங்களைச் செய்பவர்கள் மட்டுமே தண்டிக்கப்படுகிறுர்கள். ஆனுல் அவர்களும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸில் வாழும் இலங்கையர்களின் பெற்றேர், மனைவி, பிள்ளைகள், சகோதரர், உறவினர் என்போரின் நலன்களைப் பேணுவதற்காக முதலில் யாழ்ப்பாணப்பகுதியில் 'நலன்புரிச்சங்கம்' ஒன்று மிகவிரைவில் ஸ்தாபிக்கப்படவுள்ளது. ஜூன் மாதம் 10ம் திகதி நலன் புரிச்சங்கம்அமைப்பதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பிரான்ஸ் நாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களும் தற்போதுதயாரிக்கப்படுகின்றன. இத்திட்டங்களை பிரான்ஸில் உள்ள பொதுநிறுவனங்கள் ஏற்றுக்கொண்டால் பிரான்ஸில் வாழும் இலங்கையர் பல நன்மைகளைப் பெறுவார்களாம்.

## பல்கலைக்கழக ஊழியர் சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளைத் தவிர்ந்த ஏனைய சகல மட்டத்திலுமான ஊழியர்களினதும் சம்பளம் 450 ரூபாவினுல் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த மாதம் 26-ம் திகதி தொடக்கம் இச்சம்பள உயர்வு

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இவ்வுலகில் நாமெல்லோரும் தனிவழி நடப்பவர்களே; நண்பரென்பது கனவும் பொய்க்கதையுமென உணர்க.

— எமர்சன்

# நமது நோக்கு

## பாலஸ்தீன அங்கத்துவம்

பாலஸ்தீனத் தலைவர் அரபாத் உலக சுகாதார நிறுவனத்தில் தனது நாட்டையும் அங்கத்துவ நாடாக்கும்படி விண்ணப்பித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து ஐ. நா. பொதுச் செயலாளருக்கு ஓர் கடிதத்தையும் அனுப்பியிருக்கிறார். ''இதுபற்றிக் கவனிக்கப்படும்; அடுத்த கூட்டத் தொடரில் ஆராயப்படும்!'' இப்படிப்பதில் அனுப்பியிருக்கிறார் ஐ. நா. செயலாளர்.

கிணறு வெட்டப் பூதம் கிளம்பியிருக்கிறது! எப்படிப் பாலஸ்தீனத்தை உறுப்பு நாடாக்கலாம். சர்ச்சை கிளப்பியது வேறு யாருமல்ல; அமெரிக்கா தான்!

''பாலஸ்தீனம் ஒரு நாடா?'' என்று அமெரிக்காவின் செனட்டர்கள் ஓர் அறிக்கை மூலம் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அரசியற்சட்ட நிபுணர்களுக்கு இது ஓர் சவால்!

ஐ. நா. புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் போது ஒரு மரபைப் பின்பற்றி வந்துள்ளது. அந்த மரபு என்ன?

மொன்டிவிடியோ மரபு என அழைக்கப்படும் மரபு நாடு என்பதற்கோர் வரைவிலக்கணம் வகுத்துள்ளது.

அதன்படி, ஒரு நாடு என்றால் அதற்கோர் பிரதேசம் வேண்டும் அங்கு நிரந்தரமாக வசிக்கும் மக்கட் கூட்டம் இருக்க வேண்டும். அம்மக்கள் ஓர் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் அந்த அரசுக்குப் பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய சக்தி வேண்டும்.

''பாலஸ்தீனத்திற்குரிய பிரதேசம் எது? அங்கு அவர்களது ஆட்சி உண்டா?'' என்று அந்த செனட்டர்கள் கேட்டுருக்கிறார்கள்.

ஐ. நா. பொதுச்சபைக்கு இந்தப்பிரச்னை வரும்போது 95 நாடுகள் அரபாத்தை ஆதரிக்கலாம்; வாக்குகளின் எண்ணிக்கைப் பலத்தால் உறுப்பு நாடாகச் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

கதை இவ்வளவு சுருக்கமாக முடிந்துவிடும் என்று நாம் நம்பவில்லை. அணி சேரவில்லை எனக் கூறிக் கொண்டே ஓட்டிக்கொண்டிருக்கும் சிறிய நாடுகளின் வெறும் எண்கணித எண்ணிக்கைப் பெரும்பான்மை, எதையும் சாதித்துவிடாது.

அமெரிக்காவின் அதிர்ச்சி அறிவிப்பு ஒன்று கதையிலே புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கதைதொடர்கதையாகும்.

தனது விருப்பத்திற்கெதிராகப் பாலஸ்தீனம் உறுப்பு நாடாக்கப்பட்டால், உலகச் சுகாதார நிறுவனத்திலிருந்தே விலகிவிடுவேன் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

போனால் போகட்டும் என்று விட்டுவிடலாமா? பொருளியல் தாக்க விளைவுகள் பற்றியும் சிந்திக்கத்தான் வேண்டும். இந்த நிறுவனத்தின் செயற்பாட்டுக்கு ஆண்டொன்றுக்குத் தேவையானது 650 மில்லியன் டொலர்! இதிற் காற்பங்கைச் செலுத்துவது அமெரிக்கா!

அமெரிக்க எச்சரிக்கை வெறும் பூச்சாண்டி என்று தள்ளிவிடமுடியுமா? ஏற்கனவே யுனெஸ்கோவிற்கு நடந்ததை யார்தான் மறப்பர்?

இந்த விளைவுகளை எல்லாம் சிந்திக்காது அரபாத் விண்ணப்பித்திருப்பார் என்று நாம் நம்பவில்லை. இதற்குப் பின்னணியில் ஏதோ வியூகம் இருக்க வேண்டும்!

மேற்காசிய நாடுகளின் அமைதிப்பேச்சு தொடர்ந்து நடக்கவிருக்கிறது. அதிலே அரபாத்திற்குச் சரிசமமான இடம்தந்தால், அங்கத்துவக் கோரிக்கை ஒத்திவைக்கப்படலாம்!

பற்றைக்கு கல் எறிகிறார்கள்; முயல் இருந்தால் வெளியே வரும்!

# ''உலக சரித்திரத்தில் இலங்கை தமிழ்,முஸ்லிம் சமுதாயம்போல் ஏமாந்த சமுதாயம் எதுவும் இல்லை''

## பாராளுமன்றத்தில் வாசுதேவா

(நமது நிருபர் துவான் நஸீர்)

''உலக சரித்திரத்தில் இலங்கைத் தமிழர், முஸ்லிம் சமுதாயம்போல ஏமாந்த சமுதாயம் எதுவும் இல்லை. அந்தளவுக்கு இந்நாட்டு அரசியல் வாதிகளால் அவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்நிலைமைக்கு முற்கால சிங்கள அரசியல்வாதிகளுடன் முன்னைய சில தமிழ் அரசியல்வாதிகளும் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்,''

இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட எம். பி. திரு.வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் நடைபெற்ற மாகாணசபைகள் (இடைநேர் விளைவு ஏற்பாடுகள்) சட்ட மூலம்மீதான விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ ல. சு. கட்சியும் எதைப் பேசியபோதும் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்றே தொடங்குகிறார்கள். இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு அல்ல என்ற நிலையிலேயே எனது கருத்துக்கள் உள்ளன. இந்த அடிப்படையில் இடதுசாரிகளாகிய நாங்கள் சிந்திப்பதில்லை. வகுப்பு அடிப்படையிலேயே நாம் சிந்திக்கிறோம். தொழிலாளர், விவசாய வகுப்புக்களை நாம் அதிகமாக சிந்திக்கிறோம். இன, மத பிரச்னைகளின் காரணமாக வகுப்புப் பிரச்னைகள் அடிமட்டத்துக்கு போகிறது. உலகில் புதிய இளம், புதிய கருத்து தோன்றியதைப்போல இலங்கையிலும், நாம்புதிய இலங்கை மக்கள் இனம் என எழுந்து நிற்கவேண்டும்.

''ஒரு இனம் கூடுதலாக வாழும் பிரதேசத்தின் அதிகாரம் அப்பிரதேசத்தின் இனத்திடமே கையளிக்கப்படவேண்டும். ஆனால் இலங்கையில் அந்நிலை ஏற்படவில்லை. சிங்களவர்கள் பரந்த அளவில் வாழும் பிரதேசங்களில்ஏனைய இனங்கள் எழுச்சி பெற்று வரும்போது அதற்கு அவர்கள் இடம் கொடுப்பதில்லை. அதேபோலத்தான் ஏனைய இனங்களும். இது தான் யதார்த்தநிலை.

''தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனத்தைப்போல ஏமாந்த சமுதாயம் உலகில் எங்கும் இல்லை. அந்தளவுக்கு இவர்கள் பெரும்பான்மை சமூகத்தினால் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னைய தமிழ் சிங்கள அரசியல் வாதிகள்தான் காரணம். பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு என்ன நடந்தது? தூக்கி எறியப்பட்டது. தமிழர்கள் ஏமாந்தார்கள். பின்பு மாகாண சபைகள் கொண்டுவரப்பட்டன. என்ன நடந்தது. அதிகாரம் இல்லாத சபைகளுக்கு நடந்தது என்ன? இப்போது மாகாண சபைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதுபோல தமிழர்கள் ஏமாற்றப்பட்ட நிலையை நான் எங்கும் கண்டதில்லை.

''இந்த திருத்தத்தின்மூலம் இந்த அரசு அதிகாரங்களை வழங்குவதாக கூக்குரலிடுகிறது. அதிகாரங்களை கூடுதலாக வழங்குவதாக எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன. எதிர்க்கட்சிகள் வீணாக எதிர்க்கிறார்கள். இந்த அரசாங்கமா சிறுபான்மை மக்களுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்கப்போகிறது? அதிகாரங்களை இவர்கள் வழங்கப்போவதை நான் நம்பவே மாட்டேன், இந்தத் திருத்தம் ஒரு புஸ்வாணம். அதிகாரங்களை வழங்குவதானால் சரியாகக்கொடுக்க வேண்டும். சிறுபான்மை இனத்தவர்களும் சம உரிமை பெற்றுவாழும்நிலைக்கு வடக்கு கிழக்குக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்கவேண்டும். அதற்கு ஏற்றவிதத்தில் நாம் செயற்படவேண்டியது அவசியம்.

# ''பாராளுமன்ற நடைமுறையில் எனக்கு நம்பிக்கை கிடையாது''

## சபையில் காமினி பொன்சேகா

(நமது நிருபர்)

''எனக்கு பாராளுமன்ற நடைமுறைகள் சம்பிரதாயங்கள் மீது நம்பிக்கை கிடையாது. எனவே இங்கிருந்து நான் வெளிநடப்புச் செய்கிறேன்.''

இவ்வாறு பிரதிச்சபாநாயகர் திரு. காமினி பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதிச் சபாநாயகர் வெளியிட்ட கருத்தை வாபஸ்வாங்கி மன்னிப்புக் கோரவேண்டும் என்று சபாநாயகர் விடுத்த உத்தரவை மறுத்தே அவர் இவ்வாறு தெரிவிந்து வெளிநடப்புச் செய்தார்.

பாராளுமன்றத்தில் மாகாண சபைகள் சட்ட மூலத்தினை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு முன்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்ற வளவுக்குள் ஆயுதம் தாங்கிய பொலிசார் பெருமளவுக்கு குவிக்கப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டி அவர்களை வெளியேற்றுமாறு கோரினார்கள். அவ்வேளை சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரதிசபாநாயகர்நடவடிக்கை எடுப்பதாக கூறினார். எனினும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவ்வேளையில், பொலிஸ்மா அதிபர்தான் இதற்கு காரணம் என்று பிரதி சபாநாயகர் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் அவ்வாறான உத்தரவுகளை வழங்கவில்லை. எனக் கூறியதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதிச் சபாநாயகரை மன்னிப்புக்கோரும்படி வற்புறுத்தினர்.

இந்நிலையில் அல்ஹாஜ் எம். எச் முகம்மது, சபாநாயகர் ஆசனத்துக்குவந்துஉறுப்பினர் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரதி சபாநாயகர் திரு. காமினி பொன்சேகாவைப் பார்த்து ''நீங்கள் உங்கள் [illegible] குவந்துடன், அதற்காக மன்னிப்புக்கோரவேண்டும்'' [illegible] தெரிவித்தார்.

திரு. பொன்சேகாவின் பேச்சை ஒலிப்பதிவு நாடாவில் போட்டுப்பார்த்த பின்னரே, தான் இவ்வாறு கூறுவதாக ஜனாப் முகம்மதுதெரிவித்தார்.

அவ்வேளையில் ''பேச்சை வாபஸ்வாங்கும் அளவுக்கு நான் எந்த தவறும் செய்யவில்லை. எனக்கு பாராளுமன்ற நடைமுறைகள் சம்பிரதாயங்களில் நம்பிக்கைகிடையாது'' என்று வெளியேறினார். அவரை தடுத்து நிறுத்த பேராசிரியர் விமல்விக்கிரமசிங்கமுயற்சித்த போதும் அவர் வெளியேறினார்.

சபை முதல்வர் திரு. ரணில் விக்கிரமசிங்க, பிரதிச் சபாநாயகரை எதிர்க்கட்சிகள் நடத்திய முறையை இங்குள்ள பெரும்பாலானவர்கள் எதிர்ப்பதாக தெரிவித்தார்.

### சம்மாந்துறைக்கு

# அடுத்த சில மாதங்களில் அமைச்சர் குழு செல்லும்

(மட்டக்களப்பு)

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட சம்மாந்துறை, கல்முனைப் பகுதிகளின் புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பல தரவுகளை சேகரிக்குமுகமாக புனர்நிர்மாண, புனர்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா தலைமையிலான குழு ஒன்று அடுத்த சில தினங்களில் மட்டுநகர் செல்லவுள்ளது.

இக்குழுவினர் பாதிக்கப்பட்ட சகல இடங்களுக்கும் சென்று இது தொடர்பான பல தரவுகளை சேகரிப்பார். அதற்கான நடவடிக்கைகள் தற்போது அரச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரட்ண தலைமையிலான குழு, மேற்படி புனர்வாழ்வு நடவடிக்கை தொடர்பாக அப்பகுதி அரசாங்க அதிபர்கள் மட்டத்தில் மகாநாடொன்றையும் கூட்டியிருந்தார். தற்போது புனர்வாழ்வு தொடர்பான பல நடவடிக்கைகள் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மகா கும்பாபிஷேகம்

(பண்டத்தரிப்பு)

பொன்னாலை ஸ்ரீ வதராஜப் பெருமாள் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21-ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் பல லட்சம் ரூபா செலவில் நடைபெற்று வரும் திருப்பணி வேலைகளின் இறுதிக்கட்ட வேலைகள் தற்போது துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## சட்டவிரோத மின் பாவனை

(நெல்லியடி)

நெல்லியடிப் பகுதியில் பல இடங்களிலும் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

சட்டவிரோத மின்பாவனையால் மாலைநேரத்தில் மின் குமிழ்களின் பூரண ஒளியைப் பெறமுடிவதில்லை.

## நெல்லியடிச் சம்பவம்

(நெல்லியடி)

நெல்லியடி மகாத்மா வீதியிலுள்ள பண்டித்தறைஎன்னுமிடத்தில் வீடொன்றுகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

# 'நவீன முறையில் விவசாயம் அதிக வருமானம் தரும்'

(அராலி)

''எமது கிராமத்துவிவசாயிகளிற் பலர் பழைய முறையிலேயே விவசாயம் செய்துவருகின்றனர். இதனால்விவசாயத்தின் மூலம் அதிக வருமானத்தைப் பெறமுடியாது பெரும் கஷ்டப்படுகின்றனர். இந்நிலை மாறி அதிகவருமானம்பெற்று சீரும் சிறப்புமாக வாழவேண்டுமானால் தற்கால விவசாய முறைக்கேற்ப விவசாயம் செய்ய எமது விவசாயிகள் முன்வரவேண்டும், அத்தோடு கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து கூட்டுறவு முறையில் விவசாயத்தைச் செய்துகொள்ளவும் முன்வரவேண்டும்.

அராலி வடக்கு மயிலியற்புலம் விவசாய ஐக்கியகூட்டுறவுச்சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் தலைமையுரை நிகழ்த்திய பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை முன்னாள் விவசாயவிரிவுரையாளர் திரு. அ. அரியரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவிலில் இந்த அங்குரார்ப்பண வைபவம்நடைபெற்றது. திரு. அரியரத்தினம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

''தனிமனிதர் ஒருவர் பொருட்களை வாங்கும்போதும் விவசாயம் செய்யும்போதும் அதிக செலவு ஏற்படுகின்றது. இச்செலவினைக் குறைக்க கூட்டுறவு முறையானது பெரிதும் உதவுகின்றது. நவீனமுறையில் விவசாயம் செய்வதின் மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை விவசாயிகள் நன்கு தெரிந்திருக்கவேண்டும். இக்கிராமத்திலுள்ள சகலகழகங்களும், மக்களும் இச்சங்க வளர்ச்சிக்கு உதவிபுரிவதோடு ஊக்கமும் ஒத்துழைப்பும்நல்க வேண்டும்'' என்றார்.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## — சிந்திக்க - சிரிக்க

# சபையில் ஒலித்த சுவாரஸ்யமான விஷயங்கள்

— பாராளுமன்றத்திலிருந்து நமது நிருபர்

கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்ற விவாதங்களின் போதுசிந்திக்கக்கூடியசுவாரஸ்யமான உரையாடல்கள் சிலவற்றைக் கேட்கக்கூடியதாக இருந்தது அவற்றுள் சிலஇங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சி குரல்: இந்த நாட்டில் இனவாதத்தைக் கொண்டு வந்தது நாமல்ல ஐ. தே. கட்சி தான்.

அரச தரப்பு குரலொன்று; தமிழர்களை கொலை செய் என்று கோஷித்ததும் தமிழர்களுக்கு எதிராக கவிதைகள் பாடியதும் நாம் தானு?

டாக்டர்ரஞ்சித்அத்தபத்து: தமிழர்கள் பிரச்னையை தீர்க்க திரு. ஜே. ஆர். ஜெயவர்தனு திரு. அமிர்தலிங்கத்துடன் கூடிப்பேசியபோது ஜனதிபதி மாளிகையில் ஜேயாரும் அமிரும் நன்ருக உண்டு, குடித்து உறங்கி கும்மாளமடிப்பதாக கத்திக் குட்டையை குழப்பியவர்கள் நாமல்ல; நீங்கள்தான்

எதிர்க்கட்சி குரல்: நீங்கள் இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கி, தின்றுவிட்டீர்கள்.

டாக்டர்ரஞ்சித்அத்தபத்து: நீங்கள் வந்தபாதையை திரும்பிப்பார்த்துவிட்டு பேசுங்கள். தமிழ் மக்களுக்கு அதிகாரம் வழங்க மகாணசபையை கொண்டு வந்தவர்கள் நாப்

எதிர்க்கட்சி குரல்கள் யர் மாகாணசபையை கேட்டது?

(கூச்சல்)

ஐ. தே. கட்சி உறுப்பினர் ஜனுப்அஸ்வர் நீண்டநேரமாக ஒரு புத்தகத்தை மேற்கோள் காட்டி வாசிக்கிருர் எதிர்க் கட்சி தரப்பில் கூச்சல் எழும்புகிறது.

ஜனுப் அஸ்வர் நான்வாசிப்பது ஐ. தே. கட்சி தேர்தல் விஞ்ஞாபனம். இதற்குத்தான் மக்கள் வாக்களித்தார்கள்.

எதிர்க்கட்சி குரல்கள்: மக்களையும், நாட்டையும் நீங்கள் தின்றுவிட்டீர்கள்.

சபாநாயகர் (குறுக்கிட்டு), இது முக்கியமான ஒரு இடம் தயவுசெய்து உறுப்பினர்கள் அமருங்கள் வீணுக கூச்சலிடாதீர்கள். நீங்கள் இங்கேயே பேசுவதையும் நடந்துகொள்வதையும் பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்

ஜனுப் அஸ்வர்: இப்படிக் கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டம் செய்வதால் தான் எமது மக்களையும், நாட்டையும் முன்னேற்றமுடியாமல் போய் விட்டது.

[மேசையில் தட்டி கூச்சல், சிர்ப்பு......)

அரசதரப்பு குரல்: உங்கள் ஆட்சிக்காலத்தில் நாட்டின் அபிவிருத்தி சீரழிந்தது.

திரு. லக்ஷ்மன் கிரிஎல்ல: ஸ்ரீ ல. சு. க: தமிழ் மக்களை அழித்தது நாங்களா நீ. களா? தமிழ் இளைஞர்களையும், சிங்கள இளைஞர்களையும் கொல்வது யார்? யாழ் நூலகத்தை எரித்தது யார்?

திரு. லக்ஷ்மன் கிரிஎல்ல; ஸ்ரீ ல. சு, க.

பிரதம மந்திரிகாமினி திசாநாயக்கா கூட கூறினுர்......

குரலொன்று: பிரதமர் பதவியை திருட்டுத்தனமாக வழங்கியது யாரோ (சிரிப்பு)

குரலொன்று: அவர் அதை எதிர்பார்த்திருந்தார், மயிரிழையில் தப்பிவிட்டது.

ஹூம்... என்ன செய்வது? (சிரிப்பு)

திரு. டி. ஜயசிங்க ஐ. தே. க: இனவாதம் பேசாமல் செயல்பட்டால் யாருக்கும் அது நல்லது.

எதிர்க்கட்சி குழுவொன்று: யாழ்ப்பாணத்தில் இப்போது எத்தனை சிங்களவர்கள் இருக்கிருர்கள் என்று உங்களுக்கு தெரிமா?

திரு. ஜயசிங்க; மதிப்பீடு ஒன்றை நடத்தியபின்புதான் நான் அதைப் பற்றிக் கூற வேண்டும். (பலத்த சிரிப்பு)

எதிர்க்கட்சி குரல்; கடல் யாருக்கு சொந்தம்? அநுவும் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கா? அதுவும் எங்களுக்கு இல்லாமல் போய்விடப் போகிறது.

திரு. வாசுதேவநாணயக்காராவின் மூத்த சகோதரரும், காலி மாவட்ட ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பியுமான திரு, ஹேமகுமார நாணயக்கார: தமிழர் பிரச்னைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதனை தீர்க்க தீவிர முயற்சிஎடுக்கும் மகிழ்ச்சிகரமான வேளையிலே...

(ஒரு குரல் குறுக்கிட்டு): தம்பி எதிர்த்தாலும் அண்ணன் எங்களுக்கு சப்போட் (பலத்த சிரிப்பு)

திரு. ஹேமகுமார நாணயக்கார: தயவு செய்து நான் பேசும் போது குறுக்கீடு செய்யாமல் கேட்டுக் கொண்டிருங்கள்.

பலகுரல்கள்: கேட்டுக் கொண்டிருக்கவே வருத்தமாக இருக்கிறது. (பலத்த சிரிப்பு

திரு. சி. வி. குணரத்ன: (ஸ்ரீ. ல. சு. க)

நீங்கள் நடத்துவது ஐந்து நட்சத்திர ஒட்டல் ஜனநாயகம்.

பிரதிச் சபாநாயகர்: நீங்கள் சட்ட மூலத்துடன் ஒன்றிப் பேசுங்கள்.

திரு. சி. வி. குணரத்ன; சட்டமூலம் தேவையில்லை என்று நான் எதிர்பார்த்துப் பேசுவதே சட்ட மூலத்தோடு ஒன்றிய விடயம் தானே. (பலத்த சிரிப்பு)

ஜனுப் அஷ்ரப்;- தமிழ்ப் பகுதிகளில் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு சி.வி.எப். உருவாக்க அனுமதிக்கப்பட்டுள்ளதுபோல முஸ்லிம்களுக்கும் அதுபோன்ற ஒரு அமைப்பு உருவாக்க அனுமதிக்கவேண்டும். முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தாருங்கள்.

திரு. ரஞ்சன் விஜேரத்ன பாதுகாப்பு அமைச்சர்: நீங்கள் ஏன் ஒரு இனவாதியாக மாறி வருகிறீர்கள்? உங்கள் இஷ்டப்படி எல்லாம் நான் நடக்க முடியாது. (கூச்சல்)

ஜனுப் அஷ்ரப்; [ஆக்ரோஷத்துடன்] ஒரு சமூகம் பல்வேறு வழிகளில் கொலைசெய்யப்பட்டுக்கொண்டிருக்கும் போது அதனை சுட்டிக்காட்டி பாதுகாப்புக்கோருவது இனவாதமா?

## இப்படியும் நடக்கிறது

மாணவர்களின் இலவச மதிய போசனம் பற்றி சில குறிப்புகள் வெளியிட்டிருந்தேன். சிலருக்குப் பிடித்திருக்கும்; சிலருக்கு வயிறு எரிந்திருக்கும்.

''என்ன ஒரேயடியாக அறுக்கிறீர்கள்...'' என்று அந்தச் சிலர் கொதிப்படைந்திருப்பார்கள்,

இந்த நிலையில் உங்கள் உள்ளத்தை குளிரவைக்க ஒரு இனிப்பான செய்தி:

காரைநகரில் உள்ள ஒரு கல்லூரியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சோறும் கறியும் தித்திக்கும் பாயாசமும் வழங்கப்படுகிறதாம்!

பலே பலே; சபாஷ் சபாஷ்!

ஃ ஃ ஃ

பொதுஜனம் வெளியிட்டிருக்கும் ஒரு யோசனை இது:

''மதிய போசனத்தைக் கைவிட்டுவிட்டு மாணவருக்கு (ஆளுக்கு) மூன்று ரூபா கொடுக்க யோசிக்கிருர்களாம். இந்தக்காசு, ஒன்றில் வீடு போய்ச்சேரும். அல்லது இடையில் ஜூஸ்... ரொபி என்று போகும். சத்துள்ள மதிய போசனம் மாதிரி வராது. வறுமைக் கோட்டுக்குக்கீழே இருக்கும் மாணவர்களுக்கு மூன்று ரூபாத் திட்டம் நிச்சயம் வயிற்றை நிரப்பாது...'' என்கிருர். இது உங்களுக்கு சமர்ப்பணம்!

''ஊடுருவி''

### நவீன முறையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்: தலைவர்; அ.அரியரத்தினம். உபதலைவர்: செ. கந்தசாமி, செயலாளர்; அ. தாமோதரம்பிள்ளை, உபசெயலாளர்: க. சிவகுரு, பொருளாளர்:செ.பரமசிவம்பிள்ளை. பத்துப்பேர்கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சந்ததிமறவா - சரித்திரம் படைக்கும்

# எரிந்த பொதுசன நூலகம்

இழப்புக்களினூடுதொடரும் விடியலை நோக்கிய பயணத்தில் பண்பாட்டுப் படுகொலையாக நிகழ்ந்த யாழ். பொதுசன நூலகத்தின் எரிப்பினை நினைவுகூர்வோமாக! மானுட நேயத்தின் தலைகுனியக்கூடிய செயலாக அமைந்த கலாசாரப் படுகொலையை வெளிப்படுத்துவோமாக! தலைமுறை தலைமுறையாக எழுந்து வரும் தமிழ்ச் சந்ததிகளுக்கு சரித்திரம் மறவாத இந் நிகழ்வைநினைவூட்டிக்கொள்ளுதல் வேண்டும்.

எதிர்கால வாழ்வின் சுபீட்சத்துக்காக, அறிவு வளர்ச்சிக்காக முன்னின்றஅறிவகத்தினை இழந்துபோய் நிற்கும் மனங்களில் நெருடல்கள் வருடிக் கொண்டுள்ளன. எமக்கென ஜீவித்த ஆலயம் ஒன்று 'தீ'யுடன் சங்கமமாகிப் புகையைக் கக்கி சாம்பலாய் மலர்ந்ததை எண்ணும்போது துயர் கொள்ளவேண்டியதாயுள்ளது.

[யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் எட்டு ஆண்டுகள் ஆகின்றன. இதனையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது]

ஒரு இனத்தை அழித்தொழிக்கும் வண்ணமாகஅறிவாலயத்தை அழித்துள்ளனர். இனவாத அரசின் கொடூரமிக்க செயலாக அமைந்த இச் செயலை சர்வதேசம் பூராகக் கண்டித்துள்ளது. ஆயினும் அரசு, விசாரணை, புனர்நிர்மாணம் என்று வெளிப்படுத்திக் கொண்டு தமிழ்ப்பகுதிகளில் உள்ள அறிவாலயங்களை அழித்தொழிப்பதில் முன்னிற்கின்றது.

யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்டவேளை யாழ். நகரம் மீண்டும்தீக்கிரையானது. 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம், நகர வியாபார நிலையங்கள், நாச்சிமார் கோவில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம், யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினரின் வீடு ஆகியனவும் காடையரா்லும், பொலிஸாராலும் கொளுத்தப்பட்டன. இச் செயல்கள் அனைத்தும் நிகழ்கையில் யாழ்ப்பாண ஹோட்டல் ஒன்றில் அரசின் அமைச்சர்கள் இருவரும், வேறு அரச அதிகாரிகளும் தங்கியிருந்தனர். இவர்களின் முன்னிலையில்தான் இக்கொடூரச்செயல்கள் நடந்துள்ளனவா என ஊகிக்கவேண்டியுள்ளது,

நூலக எரிப்புகள் இன்னமும் தொடர்ந்த வண்ணமுள்ளன. இலங்கை இராணுவத்தால் 1984 இல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகம் எரித்து அழிக்கப்பட்டது- வல்வெட்டித்துறை பொது சனசமூக நிலையம் முப்பது இளைஞர்களுடன் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. காரைநகர் யுனிபோ நூலகம் 1985 இல் கடற்படையால் நிர்மூலமாக்கப்பட்டது. திருகோணமலையில் பல்வேறு நூலகங்களும் எரிக்கப்பட்டுள்ளன. இவ்வகையாக அறிவாலயங்களை அழித்து தமிழ் பேசும் மக்களின் மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை பூண்டோடு ஒழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். நூலகம் எரிக்கப்பட்டதையடுத்து தமிழ்ப் பிரதேசங்களிலிருந்த ஒரேயொரு பிரதான நூலகமும் இழக்கப்பட்டுவிட்டது. நூலகத்தில் எஞ்சிய நூல்களை வைத்துக் கிளை நூலகங்கள் அமைத்து அறிவாலயம் சிதறுதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மீளவும் யாழ். நூலகத்தை சிறப்பாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். இவ்விடயம் சம்பந்தமானவர்கள் உடனடியாக நூலகத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டிய பணிகளில் ஈடுபட வேண்டும்.

தற்போது யாழ். நூலகம் அமைந்துள்ள பிரதேசத்தில் மக்கள் நடமாட்டம் இல்லை. ... யாழ்ப்பாணத்தை புனருத்தாரணம் செய்க அறிந்து கொண்டிருக்கும் சிறப்பக்கட்டிடத்தைப் பாதுகாக்க வேண்டும். அமைதியான சூழல் ஏற்பட்டவுடன் நூல்களை நூலகத்தில் வைத்து மீண்டும் செயற்படுத்தலாம்.

சந்ததி மறவாச் சரித்திரமொன்ருக யாழ். பொதுசன நூலகம் எரிந்ததனை நினைவில் வைப்போமாக! பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக்கொடூர நிகழ்வை அகிலம் பூராக வெளிப் படுத்துவோமாக!!

மனித வாழ்மியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ். நூலகத்தின் எரிப்பினை நினைவு கூர்ந்து கொள்வோம்.

- சாள்ஸ் -

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அருணேதயா விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இம்மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திரு. சாமுவேல் தலைமையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## வேள்வி

(பண்டத்தரிப்பு)

சாந்தை காளியம்மன் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை வருடாந்த வேள்வி நடைபெற்றபோது ஆட்டுக் கடாக்கள் பலியிடப்பட்டன.

சிலர் பொங்கல் பொங்கியும் வணங்கினுர்கள். சுமார் 30 ஆட்டுக் கடாக்கள் வரை பலியிடப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

## ஜனதிபதி தேர்தல் ஆட்சேப மனு:

# 19-ல் விசாரணை

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனதிபதி தேர்தல் செல்லுபடியாகாதென தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி எதிர் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த தேர்தல் ஆட்சேப மனுவினை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும் என்று ஏகமனதாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசா, தேர்தல்ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா ஆகியோருக்கு எதிராக திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்த தேர்தல் ஆட்சேபனை மனுவை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட முடியாது என்று ஜனதிபதி தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி திரு. சொச்சி வாதிட்டதை அடுத்து இது பற்றி தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தில் உயர் நீதியரசர் திரு. பாரிந்த ரணசிங்க தலைமையில் நீதியரசர் திரு. எக்ஸ். டி. தம்பையா, நீதியரசர் ஜனுப் எம்.ஜெமீல், நீதியரசர் திரு. ஜி. பி. எஸ். டி. சில்வா, நீதியரசர் திரு. ஏ. ஆர். பி. அமரசிங்க ஆகியோரின் முன்னிலையில் நடந்த விசாரணைகளின் பின் வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடத்த முடியும் என்று நீதியரசர்கள் ஏகமனதாக தீர்ப்பு வழங்கினர்.

இம் மாதம் 19-ம் திகதி வழக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஜனதிபதியின் சார்பில் ஜனதிபதி சட்டத்தரணி திரு. சொக்ஸியும், திருமதி பண்டாரநாயக்காவின் சார்பில் ஜனதிபதி சட்டத்தரணி திரு. எச். எல். டி. சில்வாவும் ஆஜராகினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகதிகள் புனர்வாழ்வு நிதியம்: சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைககளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் பணியில் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983 ஆர். ஆர். எவ்) ஈடுபட்டுள்ளது.

கடந்த ஆறுவருட காலமாக யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிவரும் மேற்படி நிறுவனத்திற்கு கொழும்பிலுள்ள 'நொராட்' ஸ்தாபனம் சுயதொழில் முயற்சிகளுக்கு இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள பொருட்களை வழங்கியுள்ளது.

தையல் இயந்திரம் 65, மீன்பிடி வலை 53, கறவைப்பசு 30, சிறிய கடை வியாபார உதவி 67, கோழிப்பண்ணை 50, வண்டில்மாடு 02, நீர் இறைக்கும் இயந்திரம் 02, ஆகியவற்றுக்கான உதவிகளே 'நொராட்' நிறுவனத்தில் தற்பொழுது வழங்கப்பட்டவையாகும்.

மேற்குறிப்பிட்ட பொருட்கள் நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும் பல குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக வெளிநாட்டு ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டுள்ளதாக இவ்வலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையத்தின் செயலகம் இல: 148, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கிவருகிறது.

# "டென்னிஸ் ஆட்டத்துக்கு சிறந்த திடல்கள் உருவாகினுல் சிறந்த வீரர்களை உருவாக்கலாம்"

### - லயனல் தம்பிராசா

(யாழ்ப்பாணம்)

''வட மாகாணத்தில் டென்னிஸ் விளையாடக் கூடிய தரத்தில் ஒரு விளையாட்டுத் திடல் இதுவரை உருவாகாததால்தான் வடமாகாணத்திலிருந்து தமிழ் இளைஞர்கள் டென்னிஸ் ஆட்டத்தில் முன்னேற முடியாது இருக்கின்றது.''

இவ்வாறு, முன்னுள் டென்னிஸ் ஆட்டக்காரரும், தற்போது டென்னிஸ் பயிற்சியாளராகத் திகழ்பவருமான திரு. லயனல் தம்பிராசா கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: 'சுண்டிக்குழி பெண்கள் டென்னிஸ் கழகத்தில்' உள்ள டென்னிஸ் திடலில்தான் நான் தற்போது டென்னிஸ் ஆட்டப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றேன். இப்பயிற்சியில் பெரும்பாலும் பாடசாலை மாணவ - மாணவிகளே பங்குபற்றி வருகின்ருர்கள். இப்பயிற்சியை ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாகவே நடாத்துகின்றேன். ஆண்கள் பிரிவில் தற்போது 40-க்கு மேற்பட்டோருக்கும், பெண்கள் பிரிவில் 25-க்கு மேற்பட்டோருக்கும் நான் பயிற்சி அளித்து வருகின்றேன்.

'ஆரம்ப காலங்களில் இவ்வாட்டத்தில் இளைஞர் அவ்வளவு அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை, ஆனுல் நாளடைவில் இவ்ஆட்டத்தின் மகத்துவத்தையும் அதன் சிறப்பையும் உணர்ந்து தற்போது பல இளைஞர்களும், யுவதிகளும் இவ் ஆட்டத்தில் அக்கறை செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

'கடந்த காலங்களில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் அருகாமையில் இருந்த யுனைட்டெட் கழகத்திலும், யாழ். கோட்டைக்குள்ளும் சிறந்த டென்னிஸ் விளையாட்டுத் திடல்கள் இருந்தமையால், யாழ். நகரில் சிறந்த வீரர்கள் உருவாகி, கொழும்பு சென்று பல வெற்றிகளையும் ஈட்டினுர்கள். ஆனுல் தற்போது அவ்வாறுன விளையாட்டுத் திடல்கள் இல்லாததால் இவ்விளையாட்டை விருத்தி செய்வது மிகவும் கடினமாகவே இருக்கிறது. யாழ். நகரில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரியில் மட்டுமே டென்னிஸ் திடல் ஒன்று இருக்கின்றது.

'வட்டுக்கோட்டை கல்லூரி டென்னிஸ் கழகம்' மட்டுமே வருடாந்தம் 'செல்லராசா ஞாபகார்த்த' வெற்றிக் கிண்ணத்துக்கான ஒரு சுற்றுப் போட்டியை நடாத்தி வருகிருர்கள். இப்போட்டியிலும் சென்ற வருடம் எமது கழக வீரர்கள் பல வெற்றிகளை ஈட்டினுர்கள்.

'சிறந்த விளையாட்டுத் திடல்கள் யாழ். நகரில் வருங்காலத்தில் உருவாகினுல் சிறந்த விளையாட்டு வீரர்களும் இங்கு உருவாகி அகில இலங்கையிலும் புகழ்பெற்று விளங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.'' என்று திரு. லயனல் தம்பிராசா கூறினுர். (வி)

# "சிறுவர் நிதியக்குழுவிடம் ஆஸ்பத்திரி தேவைகளைகூற அவகாசம் தரப்படவில்லை"

(வடமராட்சி)

பிரிட்டனைச் சேர்ந்த சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அதிகாரிகள் குழு வல்வை இந்திராணி அரசினர் வைத்தியசாலைக்கு விஜயம்செய்தபோதிலும் அக்குழுவினர் ஆஸ்பத்ரியில பணிபுரியும் டாக்டர்களையோ, உத்தியோகத்தர்களையோ சந்தித்து பேச்சு நடத்த போதிய அவகாசம் அளிக்கப்படவில்லை என ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி செல்வி எஸ். பத்மலோஜி கவலை தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அதிகாரிகள் குழுவினரை அழைத்துவந்த உள்ளூர் அதிகாரிகள் ஆஸ்பத்திரியின் தேவைகள், பற்ருக்குறைகள் என்பன குறித்து அக்குழுவினருக்கு எடுத்துக்கூற ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும்போதிய அவகாசம் அளிக்கவில்லை, இந்நிலையில் உதவிசெய்ய வந்த குழுவினரின் விஜயத்தில் எதுவித பலனும் இல்லாமல் போவது கவலைக்குரியதே என்னும் டாக்டர் தெரிவித்தார்.

# "தன்னைப்போன்று பிறரையும் நேசிக்கும் சமூகசேவகர்"

(மட்டுவில்)

''படாடோபங்களிலும் கவர்ச்சிமிகு மாயைகளிலும் மயங்கியுள்ளது மனித இனம், சுயநலன்களிலும், சுயலாப நோக்கங்களிலும் மூழ்கி, தன்னுயிர் போன்று பிற உயிர்களினதும் மகத்துவத்தை உணரத்தவறிய இன்றைய உலகிலே, யேசுநாதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, தன்னைப்போன்று பிறரையும் நேசிக்கும் சமூகசேவகர் டாக்டர் பிலிப்ஸின் சேவை பாராட்டுக்குரியது,

இவ்வாறு யாழ். லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி அதிபர் திரு. வீ. ஏ. இராஜரத்தினம் மட்டுவில் ஆரோக்கியவாசக வைத்தியசாலையின் அதிபர் டாக்டர் பேதுறு பிலிப்ஸின் மணிவிழாவுக்குத் தலைமை உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

வைத்தியசாலை அரங்கில் நடைபெற்ற இவ் விழாவை சிவஸ்ரீ சி. சிதம்பரநாத குருக்கள் மங்களவிளக்கேற்றி ஆசிகூறி ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து சாவகச்சேரி இஸ்லாமிய மௌலவியும் ஆசிஉரை நிகழ்த்தினுர்,

விழா மலரை இளைப்பாறிய அதிபர் பண்டிதர் செ. சிவலிங்கம் வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியினை சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. ரீ. நவரத்தினராஜா பெற்றுக்கொண்டார்.

சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. ரீ. நவரத்தினராஜா யாழ் பல்கலைக் கழக கைதடி சித்தமருத்துவ பீட பீடாதிபதி டாக்டர் எஸ். பவானி தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை. டாக்டர் எஸ். பவானி தென்மராட்சிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை டாக்டர் எஸ், எஸ். அருளானந்தம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

திரு. இராஜரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில், 'விளையும் பயிரை முளையில் தெரியும். வாழும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும் என்பது எமது மூதாதையோரின் முதுமொழிகள். இவர் வைத்திய மாணவனுக என்னிடம் மருத்துவம் கற்கும்பொழுதே இவரிடத்தில் நல்ல குணுசங்கள் நிறைந்திருந்ததை என்னுல் காணக்கூடியதாக இருந்தது என்ருர்.

இதைத் தொடர்ந்து பலர் பரிசில்களும் பாராட்டிதழ்களும் வழங்கினர். சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் திரு. தியாகராஜா, டாக்டர் பிலிப்ஸ் உயர குத்துவிளக்கு ஒன்றை லயன்ஸ்கழக சார்பாக பரிசாக வழங்கினுர்.

டாக்டர் பிலிப்ஸ் பதிலுரை வழங்கினுர். ஏழை மாணவர்களுக்கும் விதவைகளுக்கும் அவர் உதவி அன்பளிப்புக்களை வழங்கினுர்.

# இராசி பலன்

01- 06 - 1989

துவாதசி பகல் 10-07, அச்சுவினி பகல் 2-00 வரை, அமிர்தசித்தயோகம். பிரதோஸ விரதம், நற்கருமங்கள் செய்யலாம். இராகு காலம் 1-22—2-56.

மேஷம்: தொழில் மேன்மை குடும்பத்தில் சுபகாரியம், இனசன மகிழ்ச்சி, பொருள் லாபம், சிறப்பு.

இடபம்: காரிய நஷ்டம், அன்னியர் சகவாசம், அதிக யோசனை, எதிர்பாராத தொல்லை.

மிதுனம்: தொழில் மந்திம லாபம், பயணங்களால் தொல்லை, மனையாள் சஞ்சலம், வாக்குவிரோதம்.

கடகம்: அதிகாரிகள் சீற்றம், வேலைப்பளு, குடும்ப வெறுப்பு, அறிஞர் சந்திப்பு.

சிங்கம்: விவாகப் பேச்சுக்கள், சகோதரி உதவி, கண்ணியமான சம்பவம், உறவு.

கன்னி: குடும்பத்தில் விரிசல், பொருள் நஷ்டம், வீண சண்டை, அதிக துன்பம்.

துலாம்: பணமுடை, சினேகிதர் உதவி, காதல்பகை, பயணங்களால் விரோதம்.

விருட்சிகம்: ஏமாற்றம், பொருள் நஷ்டம், உறவினர் பகை, வீட்டில் துன்பம், அவதி.

தனுசு: வீட்டில் விருந்துபசாரம், மகிழ்ச்சி, குடும்பத்தில் பாசமிகுதி ஆலய தரிசனம்.

மகரம்: மறைமுகமான தொல்லை, பணக்கஷ்டம், குறைகேட்டல், சிறுபிணி, சோம்பல்.

கும்பம்: கடன்வசூல், தொழில் வெற்றி, புதியமுதலீடுகள், குடும்பசுகம் பாராட்டு.

மீனம்: குளப்பமடைதல் எதிர்பார்த்தவை ஏமாற்றம், குடும்பத்தில் விரோதம், வாக்குவாதம், கவலை.

# மினிபஸ்ஸில் வந்த மோட்டார் சைக்கிள் அபகரிப்பு

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மினிபஸ் ஒன்றின் மீது ஏற்றி வரப்பட்ட சுமார் 21 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றை கொழும்புக்குச் சமீபமாக வைத்து ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியொன்று வழிமறித்து பலவந்தமாக அபகரித்து சென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம் செல்லும் தனியார் மினிபஸ் ஒன்றில் இந்த மோட்டார் சைக்கிள் பிரயாணி ஒருவரால் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்காக ஏற்றப்பட்டது. மினிபஸ் புறப்பட்டு கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் ஆலயத்தை தாண்டி கடற்கரை வீதிவழியாக வந்து கொண்டிருந்தபோது ஆறு இளைஞர்கள் பஸ்ஸை வழிமறித்து தாங்கள் இன்னுர் என்று அறிமுகப்படுத்தி மோட்டார் சைக்கிள் எமக்கு தேவை என்று கூறினுர்களாம்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் அதை தமது தேவைக்காக பெரும்பணம் செலவு செய்து கொண்டு போவதாகவும் தருவதற்கு முடியாது என்றும் பிடிவாதம் செய்தும் பலனில்லாது போய் விட்டதாம்.

# "இளைஞர்கள் விரக்தி அடைவதால் போதைவஸ்து பாவனைக்கு இலக்காகி பாழாகிருர்கள்! இதற்குப் பரிகாரம் காணவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''இளைஞர்கள் மத்தியில் பல பிரச்னைகள் உள்ளன. இளைஞர்கள் தமக்குள்ளே வைத்திருக்கும் பிரச்னைகளுக்கு பரிகாரம் காணமுடியாததால் விரக்தி அடைந்து, போதைவஸ்துப் போன்றபொருள்களைப் பாவிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இளைஞர்களின் பிரச்னை என்ன என்பதனை ஆராய்ந்து அதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். அது அறிஞர் பெருமக்களால் காணப்பட [illegible] ஒன்றல்ல. இளைஞர்களின் பிரச்னை ஒருபுறமாக [illegible] நிறைந்ததாக இருக்கும்போது நாமோ எமது பழமையான கலை, கலாசாரங்கள் பற்றிய பெருமைகளைப் பேசுவதில் காலத்தைக் கழிக்கிறேம். இதனை விடுத்து, எமது இளைஞர்களை துன்பநிலையிலிருந்தும் மீட்டெடுக்க வழிகாணவேண்டும்.''

இவ்வாறு யாழ் தொடர்பகத்தில் நடைபெற்ற ''போதைவஸ்து, மதுபாவனையால் ஏற்படும் விளைவுகள்'' என்ற பொருள் பற்றிய கருத்தரங்கில் [illegible] பிதா செல்வரத்தினம் அடிகள் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

''போதைப்பொருள் வியாபாரம் இன்று பல்லாயிரக்கணக்கானவர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த வியாபாரத்தால் நல்ல ஆதாயம் கிடைக்கிறது. இளைஞர்கள் விரைவாகப் பணம் தேடிக்கொள்வதற்கு போதைவஸ்துவியாபாரத்தை மேற்கொண்டுள்ளனர். உலகில் இன்று ஐந்துகோடிமக்கள் போதைவஸ்துப் பாவனைக்கு ஆளாகியிருக்கின்றனர்'' என்ருர்.

'போறூட்' அமைப்பைச்

(7-ம் பக்கம் பார்க்க)

# மாவட்டரீதியில் 2ம் இடம்

(மட்டுவில்]

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெற்ற உடற்கல்வி விளையாட்டுப் போட்டிகளில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மத்திய மகா வித்தியாலயம் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

19வதிற்குட்பட்ட இந்தக் குழுவில் சாவகச்சேரி வட்டாரப் பாடசாலைகளுக்கு மத்தியில் இடம்பெற்ற போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது,

இக்குழுவினர் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ள இருப்பதாக பாடசாலை அதிபர் திரு. கே. பேரம்பலம் தெரிவித்தார்.

# மெய்வல்லுனர் போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கொத்தணிப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப்போட்டி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 2-ம் திகதி வெள்ளிக்கிழமை யன்று நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர் திருமதி தேவரஞ்சிதம் தம்பிராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் செல்வி இ. பெரியதம்பி கலந்து கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கதி தெரியுமா?

ஒடியற் கூழ்!

''கூரும் புளி மிளகாய் கூட்டியே-ஒரளவாய் மாவைக் கரைத்ததனில் வார்த்து அகப்பையாற் றுளவி மேவும் பதம் கண்டு விட்டிறக்கி...''

என்ன யோசிக்கிறீர்கள்? இது ஒடியற்கூழ்!

வாயூறுகிறதா? 'பனங்காய் முகிழில் அல்லது பலாவிலையில் ஆதரவாய்ச் சூடாற ஊதியே''- குடியுங்கள்!

இப்படிப் பதமாகக் காச்சிப் பக்குவமாகக் குடிக்கும் முறையையும் கூறிவைத்தவர் யார்?

''இலங்கை வளமும் தால விலாசமும்'' என்ற மண் வாசனை நூலில் ஆக்கித்தந்தவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

''பனை வளத்திலிருந்து பெறக்கூடிய பணிகாரம் — பனாட்டு - நால்வகைப்பிட்டு - இருவகைக்கூழ் — புழுக்கொடியல் - கருப்பநீர் - பனைவெல்லம் — கற்கண்டு — பனங்கட்டி- இப்படிப் பல உணவு வகைகளின் செய்முறைகளை அழகாகத் தந்துள்ளார் புலவர்!

கேக்கென்றும் ஐசிங் என்றும் மேலைநாட்டு உணவுவகைகளைக் கற்றுக்கொடுக்கும் மனையியல் ஆசிரியைகள் இவற்றை அறிந்துள்ளார்களா? அறிந்து மாணுக்கருக்கு அறிவிப்பார்களா?

- வாணி

# முன்னுள் சுவீடிஷ் பிரதமர் கொலை விசாரணை திங்கள் ஆரம்பம்

[ஸ்டொக்கோம்]

முன்னுள் சுவீடிஷ் பிரதமர் ஒலவ் பாமேயின் கொலை வழக்கு விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பாமேயைக் கொலை செய்ததாக, நீண்டகாலமாக குற்றச்செயல்களில் ஈடுபட்ட பற்றர்சன் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திரு. பாமே சுவீடன் தலைநகரான ஸ்டொக்கோமில் உள்ள தியேட்டர் ஒன்றில் தமது மனைவியுடன் படம் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது சுட்டுக்கொலைசெய்யப்பட்டது தெரிந்ததே.

## இளைஞர்கள்

(6ம் பக். த் தொடர்ச்சி)

சேர்ந்த திரு. கணேசலிங்கம் தமதுஉரையில்; ''நோர்வே நாடுதான் முதன்முதலாக வடபகுதிப் பொருளாதாரத்துக்காக முதலீடு செய்த வெளிநாடாகும். 'சீ-நோர்' அமைப்பு மூலம் கடற்றொழிலுடன் சம்பந்தப்பட்ட பலவகைத் தொழில்களையும் வடபகுதி மக்களுக்காகஉருவாக்கிநடாத்தியது நோர்வே நாடுதான். நோர்வே நாட்டினர் நல்ல பயன்தரு தொழில்களைத்தான் தாம் உதவிசெய்யும்நாடுகளில் உள்ள மக்களுக்கு அளிப்பார்கள். போதைவஸ்து பாவனை, வியாபாரம் என்பன நோர்வே நாட்டு மக்களின் எதிரிகளாகும்'' என்று சொன்ஞர்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தமது உரையில் தெரிவித்த,நாவது: ''மது, போதைவஸ்து பழக்கங்களைத் தடுக்க இலக்கிய அறிவு ரீதியில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி எழுத்தாளர்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டும். கலை மூலம் சாதிக்கமுடியாதது எதுவுமே இருக்கமுடியாது. ஆழமானஆய்வுகளைமேற்கொண்டு இலக்கியகாரர்கள் தமதுஎழுத்துக்களில் மது, போதைவஸ்து தடுப்புப் பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

## தொலைபேசி இல்லாத வைத்தியசாலை

(வடமராட்சி)

கடந்த ஐந்து வருடங்களாக வல்வை இந்திராணி வைத்தியசாலை, தொலைபேசி வசதியின்றி இயங்கிவருகிறது.

மிகவும் ஆபத்தும் நெருக்கடியும் நிறைந்த இக்காலகட்டத்தில் மேற்படி வைத்திய சாலைக்கு தொலைபேசி இல்லாதது பெரும் குறையாக உள்ளது.

## பல்கலைக்கழக

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படுவதாக இருக்க வேண்டுமென்று உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்தில் உயர் கல்வி அமைச்சருக்கும், பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகளையடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி 14 ஏ பிரிவுக்குட்படும் சகல ஊழியர்களினதும் குறைந்தபட்ச மாதச் சம்பளம் 2235 ரூபாவாகும். இது கடந்த வருடத்தைவிட 79 வீதம் அதிகரிப்பாகும். இச்சம்பளத்தில் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு உட்பட சகல கொடுப்பனவுகளும் 1987-ம் ஆண்டில் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வும் அடங்கியிருக்கும்.

# ''கந்தபுராணம் ஸ்கந்த - முருக இணைப்பை முழுமையாகக் காட்டும் பேரிலக்கியம்''

## கலாநிதி சுப்பிரமணியன் விளக்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

பிமிழரின் முருகன் தொடர்பான எண்ணக்கருவின்தொன்மையை தமிழ் நாட்டின் 'ஆதிச்ச நல்லூர்' ஈழத்தின் பொன்பரிப்பு' அகழ் பொருள்களில் ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர்.

கி.மு' ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படும் ஆதிச்ச நல்லூர் அகழ்பொருட்களில் மேலும், மயில், சேவல் சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய பொன்பறிப்பு அகழ்பொருள்களிலே 'வேல்' காணப்பட்டுள்ளது. இவை முருகனுடன் தொடர்புடையனவாக கருதப்படுகின்றன.

முருகன் தொடர்பான தொன்மையான எழுத்து ஆதாரங்களாக எமக்குக் கிடைப்பவை சங்கநூல்களாகும் இந்த நூல்களில் பெரும்பாலானவை கி.பி.இருநூற்று ஐம்பதுக்கு முற்பட்டன. இந்த ஆக்கங்களிலே முருகன், போர் காதல். காமம் என்பனவற்ருேடு தொடர்பு பூண்ட ஒரு கடவுளாக சித்தரிக்கப்பட்டுள்ருர்,

'முருகசீற்றம்' முருகனை போருடன் தொடர்புபடுத்தும் 'அகநாநூறு' முருகனை காதலுடன் இணைக்கிறது.

குறுந்தொகை' முதலியன பெண்களுக்கேற்படும் காம நோயுடன் வேலனைத் தொடர்புபடுத்துகிறது.

இவ்வாறு காணப்பட்ட 'முருகனின்' கருத்துப்படிமம் நாளடைவில் வடமொழி 'ஸ்கந்தனின்' கருத்துப்படிமத்தோடு இணையத் தொடங்கியது.

இந்த இணைப்பை திருமுருகாற்றுப்படை. பரிபாடல் என்ற பிற்பட்ட சங்கநூல்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

திருமுருகாற்றுப்படை காட்டும் திருப்பரம்குன்ற முருகன் தமிழ் கடவுளாகவும் திருச்சீரலைவாய் திருஆவினன்குடி ஆகிய தலங்களில் முருகன் வடமொழி (ஸ்கந்தன்) கார்த்திகேயனுகவும் உள்ள நிலையை திரு. சு.வித்தியானந்தன் எடுத்துக்காட்டியுள்ளார்.

கி.பி. மூன்ரும், நான்காம் நூற்ருண்டுகளில் ஸ்கந்த முருக இணைப்பு உருவாகிவிட்டது தெளிவு.

இந்த இணைப்பு நிகழ்ந்து ஆயிரம் ஆண்டுகளின் பின்னர் எழுந்த இலக்கியமே கந்தபுராணம்.

கந்தபுராணம் ஸ்கந்தமுருக இணைப்புப் படிமத்தின் முழுமையைக்காட்டும் பேரிலக்கியம்.

சங்க நூல்களின் காலத்துக்குப் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் நிகழ்ந்தசமய உணர்வெழுச்சிகள். தத்துவவெளிப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கி முருகனை முழுமுதற் கடவுளாகக் காட்டும் பண்பை இந்நூலில் அவதானிக்கலாம்.

### கந்தபுராணம் தமிழ்நாட்டில்

'கந்தபுராண' நிகழ்ச்சிகள் பலவும் தஷிணம் என்பதாற் சுட்டப்படும் தென் இந்தியாவுடன் - குறிப்பாகத் தமிழ் நாட்டுடன்-தொடர்புகொண்டுள்ளமை இங்கு நம் கவனத்துக்குரியதாகிறது. 'தாரகாசுரனையும்' அவனுக்கு அரணாக விளங்கிய 'கிரவுஞ்ச' மலையையும் 'கந்தன்' அழித்த தன் தேவகிரியை அடைகிருன் அங்கிருந்து கேதாரம், காசி. திருவெண்ணுமலை, திருவெண்ணை நல்லூர் திருமுதுகுன்று' தில்லை, மண்ணியாற்றங்கரை. என்பனவற்றைக் கடந்து திருச்செந்தூரை வந்தடைகிருன், அங்கிருந்து தெற்கு நோக்கிச்சென்று இலங்கைக்குத் தெற்காகக் கடலில் இருந்ததாகக் கருதத்தக்க வீரமா மகேந்திர நகரில் சூரபன்மனுடன் போரிட்டு அவனை ஆட்கொண்டபின் தமிழ்நாட்டில் திருப்பரங்குன்றுக்கு வருகிருன். அங்குதான் தெய்வயானையை திருமணம் புரிகிருன். பின்பு தொண்டை மண்டலத்தின்மேற்பாம்என்ற ஊருக்கண்மையில் உள்ள வள்ளிமலையில் வள்ளியைக் காதலித்து கரம்பற்றுகிருன். திருத்தணிகைமலையில் வள்ளியுடன் இன்புறுகிருன்.

தொகுப்பு
ஐசண்

பின்னர், வெள்ளியங்கிரியின் அண்மையில் உள்ளகந்த வேற்படையை அடைந்து இரு தேவியரோடும்(வள்ளி.தெய்வயானை) அங்குறைகிருன்.

இவ்வாறு கந்தபுராணக் கதை நிகழ்வுகள் களம் தென்ஞடு சார்ந்தே இருக்க காணப்படுகிறது.

இருதேவியருடன் கந்தன் காட்டப்பட்டுள்ள நிலையும் தென்ஞட்டுத் தொடர்பை அரண் செய்வதாகவே உள்ளது.

கந்தபுராணத்தை தமிழ் நாட்டுக் காப்பியமாக காணும் முயற்சியில் மேற்படி அம்சங்களை அவதானிக்க வேண்டியயது இங்கு சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

கந்தபுராணம் பொருளாப்பிய இயல்பும் கலந்தது கட்டமைப்பிலே காந்பிய மைதிகொண்டது.

இதனை ஒரு காப்பியம் என்ற வகையிலும், தமிழரின் பாரம்பரிய இலக்கிய மரபுகளைத் தழுவி நின்ற நூல் என்ற வகையிலும், சமய இலக்கியம் என்ற வகையிலும் ஆய்வாளர் பலர் அவதானித்து திறனய்வுக்குறிப்புக்களை முன்வைத்துள்ளனர்.

தெ' பொ. மீனுட்சிசுந்தரஞர்இந்நூல்கந்தபுராணத்தை அடியொற்றி இயற்றப்பட்டதென்றும், மு. அருஞசலம் அவர்கள் சமயதத்துவம்கூறும் சைவ புராணங்களில் இதுவே முதன்மையானதென்றும், ச. த. திருநாவுக்கரசு அவர்கள் கந்தபுராணம் புராணக் கூறுகள், காப்பியக்கூறுகள் என்பனவற்றையும் தமிழ் மரபு சார்ந்த அம்சங்களைக்கொண்டதென்றும் கூறியுள்ளனர்.

### சைவ நூல்

கந்தபுராணம் சமய நிலையில் சைவ நூல் ஆகும்.

கந்தனைச் சிவனுகவே இந்நூல் காட்டுகிறது, சைவத்துக்குரிய கடவுட் கோட்பாடு வழிபாட்டு முறை, பொதுவான வாழ்க்கைக்குரிய அறங்கள் என்பன இந்நூலில் பல இடங்களில் சொல்லப்படுகிறது.

சமய தத்துவநிலையில் இந்நூல் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளை விளக்கி நிற்கிறது. இந்த முப்பொருள் உண்மைகளைக்கூறும் தத்துவம் சைவசித்தாந்தமே.

வழிபாட்டு முறை என்ற வகையில் வேள்வி, தவம், விரதம், பூசை என்பன கந்தபுராணத்தில் விரிவாகப் பேசப்படுகின்றன.

சூரபன்மன் தன்னையே அர்ப்பணித்து நிகழ்த்திய பெரும் வேள்வி பற்றி கூறும் 'அசுரர் யாகபடலம்' கற்போரை வியக்கவைப்பது.

தவத்தால் நிகழ்த்தவல்ல சாதனைகளை மார்க்கண்டேய படலம்' எடுத்துக்கூறுகிறது. இதிலே (காலனையும் வெல்லத் தக்க) கூற்றையும் கடக்க வல்ல ஆற்றல் வாய்ந்ததாக 'சிவபூசை'யின் மகிமை பேசப் படுகிறது.

(தொடரும்)

# வடபகுதி 3 ஆலயங்களுக்கு லண்டன் கணபதி ஆலயம் ரூ. 68 ஆயிரம் அன்பளிப்பு

(வடமராட்சி)

லண்டன் விம்பிள்டன் கணபதி ஆலய நிர்வாகம், வடபகுதியிலுள்ள மூன்று ஆலயங்களின் புனருத்தாரண வேலைகளுக்கு 68 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிதி பருத்தித்துறை ஶ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம முகாமையாளர் சுவாமி சித்ருபானந்தா அடிகளின் பேரில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

லண்டன் விம்பிள்டன் கணபதி கோவில் பிரதம [illegible] திரு. ஏ. ரி. எஸ். இரத்தினசிங்கம், கணபதி ஆலயத்தின் சார்பாக காரைநகர் சிவன் கோவில் (ஈழத்து சிதம்பரம்), கொல்லங்கிராய் வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், துணைவில் [illegible] ஆலயம் ஆகியவற்றிற்கு [illegible] 68 ஆயிரம் ரூபாவை அனுப்பிவைத்துள்ளார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மாணிக்கம்

மனேகரன்

(மனோ-காஸ்ரோ)



நீ வாழ்ந்த காலம் மிகக் குறுகியதாக இருந்தாலும் அக்காலப் பகுதியில் பல்வேறு கஷ்டங்களையும், துன்பங்களையும், சிரித்த முகத்துடன் கடந்து சென்று, நண்பர்களினதும், தோழர்களினதும் துயர் துடைப்பதில் முன்னணியில் நின்ருய். நீ வாழ்ந்த வாழ்வு எமது தோழர்களுக்கு என்றும் ஆதர்சமாகத் திகழ்கின்றது. எமது இதயங்களில் என்றும் உயிர்த்துடிப்புடன் கொலு வீற்றிருப்பாய். உன் இலட்சியப்பாதையில் நாம் தொடர்ந்து முன்னேறுகின்ருேம்.

நண்பர்கள். தோழர்கள்.

(ஏ 253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரியில் கடும் மழை!
## 11 ஆண்டுகளில் ஏற்பட்ட பெருவெள்ளம்

(இரத்தினபுரி)

கடந்த ஒருவார காலமாக இரத்தினபுரிப் பகுதியில் பெய்த கடும்மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் மூவர் பலியானார்கள். ஆயிரக்கணக்கான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி பழைய பஸ் நிலையம், பொலிஸ் நிலையம் உட்பட நகரச் சுற்றுடலில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுக்கிடக்கின்றன.

1978ம் ஆண்டுக்குப் பின்னர் இரத்தினபுரியில் இம்முறையே பெருவெள்ளம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தினால் வீடுவாசல்களை இழந்தவர்கள் பாடசாலைகளில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

## பம்பலப்பிட்டி தங்கும் விடுதியில் இரண்டரை லட்சம் ரூபா கொள்ளை!

(கொழும்பு)

பம்பலப்பிட்டியிலுள்ள விருந்தினர் தங்கும் விடுதியில் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

பல ஆயுதங்கள் சகிதம் வந்த ஐந்து இளைஞர்கள் இந்தக் கொள்ளையை நடத்தியுள்ளனர். இதில் 50,000ரூபா காசாகவும், இரண்டரை லட்சம் ரூபா நகைகளாகவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொள்ளைச் சம்பவத்தில் இந்த விடுதிக்கு வரும் முக்கிய விருந்தினர் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும், இவர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்று எட்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

இதனிடையே இவ்வேலைநிறுத்தம் தொடர்பானஇறுதி முடிவை எடுக்கும் பொருட்டு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர், இணைக்காரியதரிசி ஆகியோர் கொழும்பிலுள்ள பல்கலைக்கழக ஊழியர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நேற்றுக்காலை கொழும்பு சென்றுள்ளனர்.

இவர்கள் இன்று கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு மேற்கொண்டு செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பார்கள்.

## 21 மூன்று சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்,சமூக சேவைத்திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து 21 முச்சக்கர வண்டிகள் அனுப்பவைக்கப்பட்டுள்ளன.

சைச்கிள்களைப் பெறுவதற்காக 35 விண்ணப்பங்கள் மேற்படி திணைகளத்தில் பரிசீலனையிலிருப்பதாகத் தெரியவருகிறது.

## அரியாலையில் நேற்று

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்தி, தபால்கட்டைச் சந்தி, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை ஆகிய பகுதிகள் நேற்றுக்காலை இந்திய அமைதிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளிலுள்ளவர்களை அதிகாலையில் ஒலிபெருக்கி மூலம் கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்தசுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டவர்களின் விபரம் எதுவும் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து-சாவகச்சேரி மற்றும் தூர இடங்களுக்குச் சென்ற வாகனங்கள் இந்தச் சுற்றிவளைப்பினைத் தொடர்ந்து நல்லூர்-நாயன்மார்கட்டு ஊடாகவும், கோப்பாய்-கைதடி ஊடாகவும் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

## இலங்கை அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும் அவரது பாரியாரும் இன்று இரவு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து லண்டன் நோக்கிப் பயணமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு அண்மையில் அமைந்துள்ள ஹில்டன் ஹோட்டலில் பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க பிரதிநிதிகள் பல தடவைகள் ஜனாதிபதி, மற்றும் அமைச்சர்கள் குழுவுடன் உயர்மட்ட இரகசிய பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். இரவுடன் இந்த முதல் கட்டப்பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன.

முதல்கட்டப்பேச்சு வார்த்தைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து திரு. அன்ரன் பாலசிங்கம் உட்பட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிடம் சம்பிரதாய பூர்வமாக விடைபெற்றுக்கொண்டனர். நேற்றிரவு சுச்சரித்த மண்டபத்தில் நடந்த இறுதிச் சந்திப்பின் போதே ஜனாதிபதியும் புலிகள் பிரதிநிதிகளும் இவ்வாறு விடைபெற்றுக்கொண்டனர்.

இதுவரை நடந்துமுடிந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எதுவித தகவல்களும் வராத வகையில் கொழும்பில் பல்வேறு ஊகங்கள் வெளிவந்துள்ளபோதிலும் ஆதாரமற்றவையாகவே அவை உள்ளன.

எனினும் இரண்டாம் கட்டப்பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக திரு. அன்ரன் பாலசிங்கம் உட்பட புலிகள் பிரதிநிதிகள் மீண்டும் கொழும்பு வருவார்கள் என நம்பகமாகத் தெரிய வருகிறது. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் இம்மாத நடுப்பகுதியில் அல்லது இறுதியளவில் நடைபெறக் கூடும் என்பதை சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப்பிரதிநிதிகளும் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படுமா என்று கேட்டபோது தற்சமயம் அது சாத்தியமில்லை எனவும் இரண்டாம் கட்டபேச்சுவார்த்தைகள் நடந்தபின்பு தான் அதுபற்றி முடிவு எடுக்கப்படமுடியும்என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் 'ஈழநாடு'க்கு தெரிவித்தார்.

## வருடாந்த மகோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் ஸ்ரீ அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் அண்மையில் சிறப்பாக நடந்தேறியது.

## இது இரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர சேவையாளர் ஒருவரினால் அல்லது விசாரணை செய்வதற்கு நியாயாதிக்கம் கொண்டிருக்கும் தவறு புரியப்பட்டுள்ளதென நீதிமன்றம் அறிந்து (சந்தேகித்து) அந்நீதிமன்றத்தினால் ஒருவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு அந்த குற்றத்துக்காக விசாரணை நடைபெறவுள்ள தினத்தில் வழக்குத் தொடுப்புத் தரப்பினர் அதற்கு தயாராக இல்லாவிடின் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்கலாம். அதுவும் எக்காரணத்துக்காகவும் வழக்கு விசாரணையை வேறு ஒரு தினத்துக்கு ஒத்திவைத்தல் பொருத்தமானதென நீதிவான் எண்ணினால் அவ்வாறு விடுவிக்க முடியாது.

மேலும் இக்குற்றவியல் சட்டக்கோவையின் 188-ம் பிரிவின் 3-ம் உட்பிரிவின்படி விடுவித்தற் கட்டளை ஒரே தவறு தொடர்பில் இரண்டாம் முறையாக ஆக்கப்படுகின்ற தெரிவில் இந்த விடுவித்தல் கட்டளையானது விடுதலைக் கட்டளையாக கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்தின்படி வழக்கு தள்ளி வைக்கப்பட்டால் அல்லது வழக்குத் திகதியில் இருந்து ஓராண்டு காலப் பகுதிக்குள் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமாக இருந்தால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு விடுதலைக்கட்டளையை நீதிமன்றம் வழங்கமுடியாதிருக்கும். மாறாக வழக்கு தள்ளி வைக்கப்படாமலும், கட்டளையின் திகதியில் இருந்து ஓராண்டுகாலப்பகுதிக்குள் மீண்டும்வழக்கு ஆரம்பிக்கப்படாமலும் இருக்குமிடத்து அல்லது வழக்கு முறைப்படி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விடுவித்தற் கட்டளை இரண்டாம் முறையாக ஆக்சப்படுமிடத்து நீதிமன்றம் விடுக்கும் விடுவித்தற் கட்டளையானது விடுதலைக் கட்டளையாகக் கொள்ளப்படவுள்ளது.

இத்திருத்தச் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## நினைவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரவவிடாது இரட்டடிப்புச் செய்யப்பட்டபோது, லண்டன் வாழ் இளைஞர்கள் இச்செய்தியை உலகம் முழுவதும் பரப்பிய சம்பவங்களும் நினைவுக்கு வருகின்றன. எரிந்த பின்னர் புனரமைக்கப்பட்ட இந்த நூலகம் 1984 ஜூன் 4-ம் திகதி மீண்டும் இயங்கத் தொடங்கியதாயினும் இன்று வரை அது மக்களுக்குப் பயனற்ற கட்டிடமாகவே மாறிவிட்டது.

## பௌத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதியான திரு. ஆர். பிரேமதாசா சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்க அதிபர்களின் தலைமையில் இயங்குவதாக அமையவிருக்கும் அப்பிரிவு, மாவட்ட அடிப்படையில் அப்பிரதேசங்களின் பௌத்தமத வளர்ச்சி, பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படுதல், விடுதலை செய்யப்படுதல் தொடர்பான விடயங்களை ஆராயும்.

இவ்விஷயங்கள் தொடர்பாக அரசினால் காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட தீர்மானங்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் செயற்படுத்தினார்களா இல்லையா என்பது பற்றியும், இல்லாவிடின் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றியும் இக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் உயர் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஜி. ஸி. ஈ.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியல் வினாத்தாள் பகுதி ஒன்றிலும், இரண்டாம் பகுதி பிரிவு 'ஏ' யிலும் மாற்றங்கள் எதுவும் இருக்காது.

பிரிவு 'பி' மூன்றும் பகுதி வினாத்தாளில் பரீட்சார்த்திகள் தமக்கு விருப்பமான வினாக்களைத் தெரிவு செய்வதற்கு கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படும்.

எட்டு வினாக்களில் தாம் விரும்பும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

முன்னர் ஆறு வினாக்களில் நான்கு வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடையளிக்க வேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பாடங்களுக்கான வினாத்தாள்களிலும் அதிக வினாக்களைத் தந்து பரீட்சார்த்திகள் விருப்பமான குறிப்பிட்ட எண்ணிக்கை வினாக்களுக்கு விடையளிப்பதற்கும் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

எனினும் மேற்படி பாடங்களில் விடையளிப்பதற்கான வினாக்களின் எண்ணிக்கையில் எந்தவித மாற்றங்களும் இருக்காது என பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதாமுல்ல தெரிவித்திருக்கிறார்.

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம்மா இரத்தினசபாபதிஐயர்

கொக்குவில் சோதிட பரிபாலன மடத்தைச்சேர்ந்த திருமதி இரத்தினம்மா - இரத்தினசபாபதி ஐயர் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சமஸ்கிருதபண்டிதர் பிரம்ம ஸ்ரீ இரத்தினசபாபதி ஐயர் அவர்களின் அன்பு மனைவியும். திருமதி லலிதாம்பாள் யோகேஸ்வர சர்மா, **வாக்கிய பஞ்சாங்க உரிமையாளர் பிரம்ம ஸ்ரீ வெங்கடேசஐயர்,** காலஞ்சென்ற கதிரேசஐயர் ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி விஜயாம்பாள்–நடராஜக்குருக்கள் அவர்களின் வளர்புத்தாயாரும், பிரம்மஸ்ரீ யோகேஸ்வரசர்மா, திருமதி இராஜராஜேஸ்வரி-வெங்கடேசஐயர் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இ. சி. இரகுநாதையர் அவர்களின் அன்பு மைத்துனியும், திருமதி கமலாம்பிகை அம்மா - இரகுநாதையர் அவர்களின் அன்புச் சகோதரியும். செல்வன் இரகுநாதையர், செல்வி ரூபஜெனனி, செல்வி ரூபவதனி, செல்வன் இரத்தினரூப சர்மா, செல்வன் இரத்தின பிரபாகரசர்மா. செல்வன் கமலசரவணபவசர்மா, செல்வன் வித்தியாபரசர்மா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (1-6-1989) காலை 10-30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **இ. வெங்கடேசஐயர்,**
சோதிட பரிபாலன மடம்,
கொக்குவில்.

( சி 2809)

### திருமதி செல்லத்துரை பாக்கியம்

ஐயனார் வீதி. சண்டிலிப்பாய் திருமதி பாக்கியம் செல்லத்துரை 30-5-89ல் சிவபதமடைந்தார். இவர் வ. செல்லத்துரை (Retired Chief Permanent way Inspector Malayan Railways) அவர்களின் அன்பு மனைவியும், இராசமணி, சிவஞானம், திருஞானம், ஞானமணி, சிவமணி. ஞானகுருபரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், வரதராசா, பாலசுப்பிரமணியம், சிவபாதம், இராசலட்சுமி, பத்மராணி, ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புமாமியாரும் ரவிச்சந்திரன், அனுஷா, சந்திரகுமார், சந்திரகாந்தன், சுகன்னியா, வாசுகி, சந்திரபவான், வான்மதி, பாலேந்திரா, விக்னேந்திரா, சிறீமதி, சுமதி, பாமதி, பிரதாபன், தயாமதி, கேமலா, சுதர்சன், துவாஸ்க்கர், வயிரா, மகேந்திரன், சிவபாதசுந்தரம், லிங்கராசா, தயாநிதி, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் உமாசங்கர், ஆதித்தன், பார்த்திபன், றுமேஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-6-89) வியாழக்கிழமை ஐயனார் வீதி, சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 2-30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றூர், உறவினர். நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: **வ. செல்லத்துரை**
ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.

சி-2779

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registeied as a News Paper at the Genenal Post Office Sr iLanka under number B/10036/8. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org